# தென்றல்

பதிவு இலக்கம் : 361910

காற்று : 05 சுகந்தம் : 19 (ஐப்பசி - மார்கழி) 2012



## மட்டக்களப்பில் நடைபெற்ற சிறுவர்தின கலை நிகழ்வு!!!

பருத்தியூர் பாலவயிரவநாதன்

வாசகர்களுக்கு இனிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்!!!

65/=


தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்!!!

Life's Good

# LG Abans
## Show Room


### மடிக்கணினிகள்




### LED 3D தொலைக்காட்சி




### ஹொப்



### வளிச்சீராக்கிகள்



### LG சலவை இயந்திரம்



(நிபந்தனைகளுக்குட்பட்டது)

**தொடர்புகளுக்கு....**
**அபான்ஸ் காட்சியறை,**
**263, 265, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**
**தொலைபேசி இல : 065-2227895**

AD/0020

# தென்றல்

# THENDRAL



44/1, பழைய கல்முனை வீதி,

கல்லடி, மட்டக்களப்பு

தொ.பே : 077 - 6983597

பெக்ஸ் : 065 - 2227542

Email:- kirupabatticaloa@yahoo.com



**ஆசிரியர்**

க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**

திரு. வீ. கே. ரவீந்திரன்

திரு.இ.கோபாலபிள்ளை

திருமதி.கவிதா.கிருபாகரன்

கலாபூஷணம்.ஆ.அரசரெத்தினம்

**ஆலோசகர்**

இரா. நாகலிங்கம்

(அன்புமணி)

**ஓவியம்**

சி.டானியல்

**கணணி வடிவமைப்பு**

அ.ஜெயலக்ஸ்மி

**ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ–ர்)**


## தமிழியல் விருது

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வருடா வருடம் நடத்தி வரும் விருது வழங்கல் நிகழ்வு இவ்வாண்டும் வெகுசிறப்பாக மட்டக்களப்பு தேவநாயகம் கலையரங்கில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு இலண்டனிலிருந்து வருகை தந்த மூத்த எழுத்தாளர் வவுனியூர் இரா. உதயணன் விஷேட அதிதியாகக் கலந்து கொண்டு, சிறப்பித்தமை நிகழ்வை வலுவூட்டியது.

இவ்விழாவில் 26 முன்னணி எழுத்தாளர்கள் தமிழியல் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களில் பேராசிரியர் சி. மௌனகுரு உயர் தமிழியல் விருதுடன், 15000ரூபா பணத்தினையும் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் பெருந்திரளான எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள், பொதுமக்கள் எனப்பல நூற்றுக் கணக்கானோர் திரண்டிருந்தனர்.

இவ்வாறான பெருமைமிக்க நிகழ்வில் ஊடகவியலாளர்கள், சிற்றிதழ்களுக்கு விருது வழங்காதது பெரும் குறைபாடாக இருந்தது.

இனிவரும் காலங்களில் ஊடகவியலாளர்கள், சிற்றிதழ்களுக்கும் விருது வழங்க ஏற்பாட்டாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளைத் **"தென்றல்"** விடுக்கிறது.

தமதுநலனை விட தேசிய நலனை நோக்காகக் கொண்ட சிற்றிதழ்களை யாரும் எண்ணிப் பார்க்க மறந்து விடுகின்றனர். இந்நிலை மாற எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் நடவடிக்கை எடுக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்!!!

**என்றென்றும் அன்புடன்**
**-ஆசிரியர்-**

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 300/= | US$20 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$100 |

**ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.**

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

**அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.**

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

உலகின் செம்மொழித் தகுதி பெறுவதற்கு தகைமைகள் பல வேண்டும், தொன்மையான, தொடர்ச்சியான, உலகப் பொதுமையான, மனித விழுமியங்களை தன்னகத்தே கொண்டதான, எளிமையான, இனிமையான இலக்கியங்களும் மொழியின் பழமை, செழுமை, தனித்துவம், கட்டுக்கோப்பு என்பவற்றைப் பேணுகின்ற இலக்கணங்களும் முதன்மை பெறுகின்றன. பேசும் போதும், வாசிக்கும் போதும், பாடும் போதும், நடிக்கும் போதும், எழுதும் போதும் அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் செம்மொழியாக தகுதி பெற்ற எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை பேணி வளர்க்க முயல்வோமாக!

- கலாபூஷணம், ஆறுமுகம், அரசரெத்தினம் -

# 2 வழுக்கள் - ஏழு

உலக நடைமுறையில் முன்னோர், ஆன்றோர், சான்றோர், புலவோர், அறிஞர் என்போர் மொழியை எவ்வாறு பிரயோகித்தனரோ அவ்வாறு பிரயோகிப்பதே மரபு. அதிலிருந்து தவறினால் மரபு வழுவாகும். சேவல் கூவும் என்பதே மரபு. சேவல் கொக்கரிக்கும் என்பது மரபு வழுவாகும்.

முற்கூறிய திணை, பால், இடம், காலம், வினா, விடை ஆகிய 6 விடயங்களையும், இலக்கண விதி முறைகளையும் மீறிப் பேசுவதும், எழுதுவதும் மரபு வழுவாகி விடும்.

தமிழ் இலக்கணப்படி மொழிக்கு முதலில் வரும் எழுத்து, இறுதியில் வரும் எழுத்து, இடையில் மயங்கி வரும் எழுத்து, வினாவெழுத்து, உடம்படுமெய் என்பவற்றையெல்லாம் மரபாகக் கொள்ளுதல் வேண்டும். நிலைமொழி-வருமொழி ஆகிய சொற்களைப் புணர்த்தி எழுதும்போதும், பிரித்து எழுதும்போதும் மரபினைக் கவனித்தல் வேண்டும். நிலத்திலும், நீரிலும் வாழக்கூடிய ஆமை, நான்கு கால்களையும், தலையினையும் தனது ஓட்டினுள் மறைத்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் தன்மை ஆமைக்குண்டு. ஐம்பொறியடக்கத்துக்கு ஆமையை மேற்கோள் காட்டுவர்.

ஆமை என்ற சொல்லை ஆமை என்று பிரித்து- **"ஆ"** என்பதற்குப் பசு என்றும் **"மை"** என்பதற்கு அஞ்சனமை எழுதுகின்றமை, ஆடு என்றும் பொருள்

கூறுவது மரபு வழுவாகிவிடும்.

**"ஆமை"** என்பதைப் பகாப்பதம் என்று கொண்டால்தான் கூர்மம் என்ற பொருள் தரும். பிரித்துப் பசு, ஆடு என்ற பொருள் கூறினால் மாடும், ஆடும் சேர்ந்து ஆமையாகாது. எனவே அது வழு.

தமிழ்மொழியில் மனித மகவு அணில், கீரி, கிளி, தென்னை, கமுகு என்பவற்றின் இளசுகளை பிள்ளையென்று அழைப்பது வழக்கம். (அணில்ப் பிள்ளை, கீரிப்பிள்ளை) குயில் கூவும் என்பது போல் கரையும், அகவும், அலறும், கதறும், கத்தும், ஊளையிடும், கர்ச்சிக்கும், உறுமும், பிளிறும், கனைக்கும், குரைக்கும், சொல்லும் என்ற சொற்களை மரபு பிறளாது பயன்படுத்துதல் வேண்டும். நாற்று, கன்று, வடலி, குட்டி, குலை, சிப்பம், குழாம், மூசு, கச்சல், வடு, இளநீர், நுங்கு, முத்து, சுளை, சோறு என்பனவாய சொற்களையும் மரபறிந்து பயன்படுத்துதல் வேண்டும்.

பால்+குடம் என்பதைப் புணர்த்திப் பாற்குடம் என்று எழுதுவர். பால் + குடித்தான் என்பதைப் பாற்குடித்தான் என எழுதாமல், பால் குடித்தான் என எழுதுவதே மரபு. வருமொழி வினைச்சொல்லாக வருமிடத்து, இந்த மாற்றம் நிகழ்வதை மரபாகக் கொள்ளுதல் வேண்டும். சில மென்றொடர் குற்றியலுகரச் சொற்கள் வன்றொடராக மாறிப் புணர்வதற்கு சிலப்பதிகாரம், முருக்கம் பூ, குரக்குப்பட்டை, கற்றா, அற்புத்தளை என்பனவற்றை மேற்கோள் காட்டுவர்.

எனவே வழுக்கள் நேராமல் - தமிழைப் பேசி, எழுதிப் பேணி வளர்க்க முயல்வோமாக!


## விநியோகஸ்தர்கள் தேவை!


**"தென்றல்"** சஞ்சிகையை நாடளாவிய ரீதியில் விநியோகிக்கும் பொருட்டு ஆர்வமுள்ள விற்பனை முகவர்கள் நாடளாவிய ரீதியில் தேவைப்படுகின்றனர். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்போர் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், அனுபவம் என்பவற்றைக் குறிப்பிட்டு எதிர்வரும் 15-12-2012ஆந் திகதிக்கு முன்னர் - ஆசிரியர், தென்றல், 44/1- பழைய கல்முனைவீதி, கல்லடி, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

-ஆசிரியர்-

# தென்றலின் தேடல்

-க.கிருபாகரன்-

## பருத்தியூர் பாலவயிரவநாதன்



யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பருத்தித் துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட பாலகிருஷ்ணன் வயிரவநாதன் எனும் இயற் பெயரைக் கொண்ட இவர் தன் பெயருக்கு முன்னால் தான் பிறந்த மண்ணான பருத்தித் துறையை இணைத்து பருத்தியூர் பாலவயிரவ நாதன் எனும் பெயரால் இலங்கையின் தேசிய நாளேடுகளில் எழுதி வருபவர்.

இவரைத் **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக்கொணர்வதில் **"தென்றல்"** பேருவகையடைகிறது.

## பாடசாலைக் காலம்

தனக்கு கல்வியறிவூட்டிய ஆசான்கள் மூலம் தமிழ், சமய அறிவு வளர்ச்சியடைந்ததாக **"தென்றல்"**க்குத் தெரிவித்தார். பாடசாலைக் காலத்தில் **"அரங்கொலி"**, **"விஞ்ஞானி"** எனும் கையெழுத்துச் சஞ்சிகையை ஆரம்பித்து சித்திரங்களையும் வரைந்து வந்தார். **"பிரபஞ்ச வாழ்க்கைத் தத்துவம்"** எனும் தத்துவக் கவிதையினை பதினைந்து வயதில் தான் எழுதியதாகவும்- அதனைப் பலர் நம்பாதது தனக்கு வருத்தத்தைத் தந்ததாகவும் கூறினார்.

## பெற்ற விருதுகள்/பரிசில்கள்

1. கலாசார அமைச்சினால் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகத் தமிழ்ப் பாடல் பிரிவில் சிறப்புப் பரிசில் பெற்றமை.
2. 2005, 2006ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து சிறுவர் இலக்கியத்திற்காக முதல் பரிசும், விருதும் கிடைத்தமை.
3. 2006ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்ட சிறுகதைப் போட்டியில் விஷேட சிறப்புப் பரிசிலும், பாடலுக்கான சிறப்புப் பரிசில் உட்பட ஒரே தடவையில் மூன்று

இலங்கையின் ஆற்றல் மிக்க - மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய, இசைத் துறைக்கு பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு கொண்டு வரும் வகையிலேயே **"தென்றலின் தேடல்"** எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பரிசில்கள் பெற்றுள்ளமை.

4. இலங்கை இலக்கியப் பேரவையினால் வாழ்வியல் வசந்தங்கள் பாகம்-01 நூலுக்காக முதற்பரிசு கிடைத்தமை.
5. 2009ஆம் ஆண்டு பெற்ற கலாபூஷணம் விருது.

## தொழில்

ஆரம்பத்தில் ஆசிரியராகவும்-பின்னர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பிரதம எழுதுவினைஞராகவும், நிர்வாக உத்தியோகஸ்தராக பதவிநிலை அலுவலராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற இவர் 45 வருடங்களுக்கு மேலாக எழுத்துத் துறையில் தொடர்ச்சியாக எழுதி வருகிறார்.


## ஆக்கங்கள் வெளியான ஊடகங்கள்

1. **"வாழ்வியல் தேடல்கள்"** எனும் எனது சிந்தனைத் தொடர்க் கட்டுரைகள் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஞாயிறு தினக்குரல் மஞ்சரியில் வெளிவந்து கொண்டிருந்தன. தற்போது உளவியல் தொடர்பாக பெண்கள் பகுதியில் எழுதி வருகிறார்.
2. அத்தோடு **"வாழ்வியல் அரங்கம்"** தொடர் வீரகேசரியிலும், வாழ்வியல் சிந்தனைக் கட்டுரைகள் தொடர் தினகரன் வாரமஞ்சரியிலும், **"வாழ்வியலோடு நாம்"** எனும் கட்டுரைத் தொடர் தினசரியாகச் சுடர்ஒளியில் ஏழு மாதங்கள் வெளிவந்தன.

## எழுதி வெளியிட்ட நூல்கள்

வாழ்வியல் வசந்தங்கள்

| | | | |
|---|---|---|---|
| பாகம்-01 | பாகம்-06 | பாகம்-11 | பாகம்-16 |
| பாகம்-02 | பாகம்-07 | பாகம்-12 | பாகம்-17 |
| பாகம்-03 | பாகம்-08 | பாகம்-13 | பாகம்-18 |
| பாகம்-04 | பாகம்-09 | பாகம்-14 | |
| பாகம்-05 | பாகம்-10 | பாகம்-15 | |



இவ்வாறாக பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதிவரும் பருத்தியூர் பாலவயிரவநாதன் **"தென்றல்"** போன்ற வளர்ந்து வரும் சஞ்சிகைகளை வளர்த்து வருவதையும் குறிப்பிட்டாக வேண்டும். இவரது கலை, இலக்கியப் பணி தொடர வேண்டுமெனத் **"தென்றல்"** மீண்டும் வேண்டி நிற்கிறது.

# வாசகர் நெஞ்சம்

எனது அபிமான **"தென்றலுக்கு"** ஏன் விருது வழங்கப்பட்டது, என யாரோ ஒருவர் கட்டுரை வாசித்ததாக ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டது கவலை தந்தது. தரமான சஞ்சிகையை ஏன் இப்படி விமர்சிக்கின்றனரோ தெரியாது.

எஸ். கீதா
கண்டி

-மருதூர் ஜமால்தீன்-

# மாறாச் சொத்து

கட்டழகால் உலகிலின்று
காணுகின்ற கலையழகும்
மொட்டவிழ்ந்த மலரும் பெண்
மேனிதரும் பொலிவழகும்
சிட்டழகைக் காட்டிப் பதி
சீவிக்கு முயிரழகும்
வீட்டழகும் வாழ்விற் பல
வருமழகும் மாறிவிடும்!

........................

படையழகும் நாடுகளைக்
காக்கின்ற திறனழகும்

உவக்கின்ற உருவழகும்
நடையழகும் நளினத்தால்
மயக்கும் மொழிச் சொல்லழகும்
கொடையழகும் பதியிலிந்த
வாழ்வழகும் மாறிவிடும்!!

........................

உறவழகும் உண்மையினை
உரைக்கின்ற உளவழகும்
புறவழகும் மக்கள் திறன்

புகழ் சேர்க்கும் அறிவழகும்
அறிவழகால் சமூகத்தை
அலங்கரிக்கும் பணியழகும்
திறனழகும் காலமது
விரைந்துவிட மாறிவிடும்!!!

........................

கலையழகும் வாழ்விற் தமிழ்க்
கருத்தூன்றும் கவியழகும்
சிலையெனவே நெஞ்சமதில்
சிறையாகும் படைப்பழகும்
நிலையாக இப்படைப்பை
நிலையாக்கும் இலக்கியங்கள்
அலைபாயும் மனுவழகு
அழிந்திடினும் மாறாது!!!!



# அடங்காப்பற்றின் வன்னிமை அரசர்கள்.....

க.தங்கேஸ்வரி - பி.ஏ(தொல்)சிறப்பு

## முன்னுரை

இலங்கையின் ஆதிக்குடிகள் திராவிடர். இந்திய துணைக் கண்டத்தின் ஆதிக்குடிகள் திராவிடர்கள் என்பது ஆய்வுகள் காட்டும் முடிவு.

வடக்கே இமயம் தொடக்கம் தெற்கே இலங்கைத்தீவு வரையும் அமைந்திருந்த துணைக் கண்டம் திராவிட மக்களின் பாரம்பரியம் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை. சிங்களவரின் மூதாதை எனப்படும் விஜயன் கலிங்கத்திலிருந்து ஈழநாட்டிற்கு வந்தபோது (கி. மு-543), இங்கு வாழ்ந்தவர்கள் இயக்கர், நாகர் எனப்பட்ட மக்களாகும். இவர்கள் ஆதித்திராவிடர் வழித்தோன்றல்களாகும். சிங்கள வரலாற்று நூலான மகாவம்சம் இதனைத் தெளிவாகக் கூறுகிறது.

விஜயன் இலங்கைக்கு வந்தபோது இலங்கையின் கரையோரப் பிரதேசம் முழுவதும் இயக்கர், நாகர் வாழ்ந்ததாகவும் மகாவம்சம் கூறுகிறது. இதனை மேலும் பல ஆய்வுகள் உறுதிசெய்கின்றன. இலங்கைத் தொல்பொருளியல் திணைக்களத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் **“கி. மு 35000 ஆண்டுகளுக்கு முன் இலங்கையின் கிழக்குக் கரையோரங்களில் வாழ்ந்த நாகர்கள் இலங்கையின் நாகரீக வரலாற்றிற்கு பெரும் தொண்டாற்றியுள்ளனர்.”** என்கிறார். *(Deraniga s.u pre and photo historic sellments in srilanka-2B.No.8.1997)*

இக்கூற்று முன்னைய மகாவம்சக் கூற்றினை உறுதி செய்கிறது. இங்கு காணப்பட்ட பண்பாட்டுச் சின்னங்கள், பிராமிக் கல்வெட்டுக்கள், மீன்சின்னங்கள், பெருங்கற்காலக் கல்லறைகள், மட்பாண்டங்கள் போன்ற பலவும் இவற்றை மேலும் உறுதி செய்கின்றன. விஜயன் வரும்போது ஐந்து ஈச்சரங்கள் இருந்ததாக மகாவம்சம் கூறுகிறது. அவை முன்னேச்சரம், திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், நகுலேஸ்வரம், தொண்டேஸ்வரம் என்பனவாம். இவற்றிலே தொண்டேஸ்வரம் தெற்கில் அமைந்திருந்தது. தொண்டேஸ்வரம் பற்றி கிரேக்க யாத்திரிகரான **"டொலமி"** குறிப்பிட்டுள்ளமையை நோக்கும் போது, **"தீவின் கரையோரம் முழுவதும் தமிழர் செறிந்து வாழ்ந்துள்ளனர்"** என்பது உறுதியாகிறது.

## வன்னியர் ஆட்சிப் பிரதேசம்

வடக்கே வன்னியர் ஆட்சிப் பிரதேசம் யாழ்ப்பாணம் தவிர்ந்த திருகோணமலை வரை பரந்து காணப்பட்ட பிரதேசங்களாகும். தற்போதைய மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதி வன்னி எனப்பட்டது. இவ்வன்னிப் பிரதேசத்தில் ஏழு வன்னியர் ஆட்சிப் பிரதேசங்கள் அடங்கியிருந்தன. அவை:-

01. பனங்காமம்
02. முள்ளியவளை
03. கருநாவல்பற்று
04. தென்னமரவடி
05. மேல்ப்பற்று
06. கரிக்கட்டுமூலை
07. செட்டிகுளப்பற்று

ஆகியனவாம்.

## வன்னியரின் இறைமை

இவ் ஏழு வன்னிப் பிரதேசத்தில் ஆட்சி செலுத்திய வன்னியரசர்களும் அரசர்களுக்குரிய இறைமாட்சியுடன் ஆட்சி செலுத்தியதை வரலாறு கூறுகிறது. பிற்காலத்தில் போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற அன்னியர் வரும்வரை இவ்வன்னியர்களது ஆட்சி எதுவித குழப்பமுமின்றி, நடைபெற்றது. இவர்கள் இவ் அந்நியரை எதிர்த்துப் போராடி வெற்றி பெறும் அளவு வீரம்மிக்கவர்கள். எவருக்குமே அடங்காதவர்கள். ஆதலால் இவ்வன்னி **"அடங்காப்பற்று"** என்ற பெயரையும் பெற்றிருந்தது. யாழ்ப்பாணத்து

மன்னர்களுக்கு திறை கொடுக்க மறுத்தவர்கள் இவ்வன்னிச் சிற்றரசர்கள் ஆவர். அந்நியரான ஆங்கிலேயரின் துவக்கு, பீரங்கிகளுக்கு அடிபணிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட போதும், கைலாயவன்னியன், பண்டாரவன்னியன் போன்றோர் இறுதிவரை இறைமையைப் பாதுகாத்து, மானத்துடன் உயிர் துறந்தனர்.

யாழ்ப்பாணம், மன்னார், கோட்டை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆட்சியாளர்கள் டச்சுக்காரர் ஆட்சிக்கு அடிபணிந்து வரி செலுத்தினர். பனங்காமம் வன்னியனும் திறை செலுத்த வேண்டுமென யாழ்ப்பாணத்தை நிர்வகித்த டச்சுக்கவர்ணர் தொடர்ந்து 12 ஆண்டுகளாக ஓலை அனுப்பிக் கொண்டே இருந்தான். கைலைவன்னியன் கவர்ணரின் ஆணையை மீறி திறை செலுத்தாது நாட்டின் இறைமையைப் பாதுகாத்துள்ளான். *(c.navaratnam-vanni and vanniys)* இதே விடயம் டச்சுக் கவர்ணரான தோமஸ் வொன்றி (1692-1697) அறிக்கையிலும் கூறப்பட்டுள்ளது. அவர் கூறியுள்ளது வருமாறு:-

*"There were a constant source ofirration to the dutch as they had bean to the Portuguese. he chiefs would not pay their tribute of elephants and their land rents, and some even would not appear at the annual durbar, when they were summend by the governors. this was specially the case with kailayavanniya at panakamam, who faild to appear before the dutch governor Thomas vantree. (1692-1697)*

இறைமையை மேலாக மதித்த இக்கைலாயவன்னியன் 1678இல் உயிர்துறக்க அவனது பேரனான காசியனார் என்னும் வன்னியன் திறை கொடுக்க ஒப்புக் கொண்டதாகவும், அதனை மிக மகிழ்ச்சியுடன் அப்போதைய ஒல்லாந்த தேசாதிபதி தனது மேலதிகாரிக்கு அறிக்கை செய்தான்- எனவும் அறிய முடிகிறது.

அந்நியர்க்கு அடிபணிய மறுத்து, அஞ்சா நெஞ்சமுடன் ஆட்சி செய்தவன் குலசேகர வைரமுத்து பண்டாரவன்னியன். இவ்வீர புருஷனின் வரலாறு தமிழகத்தின் பாஞ்சாலங்குறிச்சி மன்னனான வீரபாண்டிய கட்டப்பொம்மனின் வரலாற்றை ஒத்தது. பண்டார வன்னியனின் ஆட்சி அந்நியருக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. பனங்காமம்பற்று, வன்னிப்பற்று என்பன

அடங்காப்பற்றில் உள்ள ஏழு பிரதேசங்களில் ஒன்றானாலும் அப்பிரதேசத்தின் அரைவாசிக்கு மேற்பட்ட பெருநிலப்பரப்பைக் கொண்டது. இதனால் பனங்காமத்து வன்னியன் தலைவனாக மதிக்கப்பட்டான். இம்மரபு பண்டார வன்னியனின் இறுதிவரை தொடர்ந்தது.

## கண்டி மன்னனும், பண்டாரவன்னியனின் வீரமும்

அந்நியரை எதிர்ப்பதில் கண்டி மன்னனும், அடங்காப்பற்று வன்னியர்களும் பரஸ்பரம் உதவி செய்தனர். இந்நட்புறவு பண்டாரவன்னியன் காலத்திலும் பேணப்பட்டது. ஆங்கிலேயர் முதன்முறையாக கண்டியைக் கைப்பற்றுவதற்கு படைஎடுத்தபோது பண்டாரவன்னியன் படை வீரரைத் திரட்டி, கண்டி மன்னனுக்கு உதவிக்கு அனுப்பினான். இப்போரில் பண்டாரவன்னியனின் படைவீரர் காட்டிய வீரம் ஆங்கிலேயரைத் திணற வைத்தது. இப்போரிலே கண்டி மன்னன் வெற்றிபெற, ஆங்கிலேயர் பின்வாங்க நேர்ந்தது. இதனால் ஆங்கிலேயரின் முழுக்கவனமும் பண்டாரவன்னியன் மீது திரும்பியது. வன்னிப் பிரதேசத்தைக் கைப்பற்றினால், வன்னியர்களையும் அடக்கி கண்டியையும் கைப்பற்றலாம் என எண்ணினர். அதற்கான சூழ்ச்சியையும் மேற்கொண்டனர்.

## வென்டிறிபேர்க் சூழ்ச்சியும், காக்கை வன்னியனும்

கரிக்கட்டுமூலை வன்னியனான காக்கை வன்னியனைக் கைக்குள் போட்டுக் கொண்ட ஆங்கிலேயர் அவன் ஆட்சிப் பிரதேசமான முல்லைத்தீவில் ஒரு கோட்டையை அவசரமாகக் கட்டினர். இவ்வேலையை இரகசியமாகச் செய்ததால் செய்தி காலம் தாழ்த்தியே பண்டாரவன்னியனுக்குக் கிடைத்தது. உடனே பண்டாரவன்னியன் தனது யானைப்படை, குதிரைப்படை, காலாட்படைகளுடன் ஆங்கிலேயருடன் போரிட்டு, மூன்று பீரங்கிகளையும், பல துப்பாக்கிகளையும், பல படைவீரர்களையும் கைப்பற்றினான். எனினும் இளகிய மனம் கொண்ட பண்டாரவன்னியன் கைது செய்த படைவீரரை விடுதலை செய்தான் - என அறிய முடிகிறது. பண்டாரவன்னியனுடன் நேருக்கு நேர் மோதமுடியாத வென்டிறி பேர்க் பல சூழ்ச்சிகளை மேற்கொண்டான்.

## வென்டிறிபேர்க்கின் அடுத்த சூழ்ச்சி

பண்டாரவன்னியனை தோற்கடிப்பதற்காக ஆங்கிலேயர் பின்வரும் முப்படைகளையும் திரட்டினர்.

1. திருகோணமலையிலிருந்து கப்டன் எட்வேட் மட்ஜ் *(Edward madge)*
2. யாழ்ப்பாணத்திலிருந்து லெப்டினனட் ஜோன் ஜுவல் *(Lietuent join jewll)*
3. மன்னாரிலிருந்து கப்டன் வென்டிறிபேக் *(Von drieberg)*

முல்லைத்தீவில் கோட்டை கட்டும்போது கைக்குள் போட்டுக் கொண்ட அதே காக்கைவன்னியனை இதற்கும் பயன்படுத்தத் திட்டம் போட்ட டிறிபேர்க் மீண்டும் ஒரு சூழ்ச்சியை மேற்கொண்டான்.

அவனுடைய ஏற்பாட்டின்படி மூன்று திக்குகளிலிருந்து பண்டாரவன்னி னைச் சுற்றி வளைத்து தாக்க வேண்டும் என்பது திட்டம். ஆனால் மன்னாரிலிருந்து படைகள் வரும் செய்தி பண்டாரவன்னியனை எட்டாதவாறு காக்கை வன்னியன் மூலம் தடை செய்து விட்டான். யாழ்ப்பாணத்திலிருந்து வரும் படைகளையும், திருகோணமலையிலிந்து வரும் படைகளையும் எதிர்கொள்வதற்குரிய முன்னேற்பாடுகளை பண்டாரவன்னியன் செய்யலா னான். திருகோணமலையிலிருந்து வரும் படைகளை எதிர்கொள்ள மைத்து னன் குமாரசிங்க வன்னியனையும், (சகோதரியின் கணவன்) யாழ்ப்பாணத்தி லிந்து வரும் படையை எதிர்கொள்ள தனது தலைமையிலான படையணியை யும் ஏற்பாடு செய்தான். பண்டாரவன்னியனைச் சுற்றி வளைத்துக் கொண்ட செயல் 1803ஆம் ஆண்டு ஒக்டோபர் 31ஆம் திகதி அதிகாலை 5.00மணிக்கு நடந்தது. ஒருமுறை ஆங்கிலேயப் படைகளை சிதறடித்த மாவீரனை சுலபமாகத் தோற்கடித்து விட்டனர். இப்படி சூழ்ச்சியால் தோற்கடிக்கப்பட்டதை கப்டன் வென்றிபேர்க் ஒரு கல்லில் பொறித்துள்ளான்.

சூரியன் அஸ்தமிக்காத நாடு என்று புகழ்பாடும் ஆங்கில சாம்ராஜ்யம் ஆங்கிலத் தளபதிகள், பீரங்கிப்படை, துப்பாக்கிப்படை அத்தனையையும் சாதாரண வாளும், ஈட்டியும் கொண்டு போரிட்ட பண்டாரவன்னியனை நேருக்கு-நேர் மோதமுடியாமல் சூழ்ச்சியால் மடக்கிப் பிடித்தமையை ஒரு பெருவெற்றியாக கற்சிலைமடுவில் ஒரு நடுகல்லில் பொறித்துச் சென்றனர். அந்த வாசகம் ***"Here abouts captain von dreberg defeated pandara vawniya 31st oct 1803"*** என்பதாகும்.

தோற்கடிக்கப்பட்ட பண்டாரவன்னியன் வன்னியை விட்டு விலகிய போதும், மீண்டும் 1810இல் தாக்கியதாகவும், அப்போது அவனிடம் 14 வீரர்களே இருந்ததாகவும், கடுமையான தாக்குதல் மேற்கொண்டான் எனவும், வரலாறு கூறும். தங்கை நல்லநாச்ச வன்னிச்சியும் மன்னார், திருகோணமலையிலி ருந்து

வந்த படைகளை சமாளிக்க முடியாமல் போராடினாள் - எனவும் அறிய முடிகிறது. வன்னியர்கள் மட்டுமல்ல. வன்னிச்சிகளும் வன்னியின் இறைமையைக் காக்க போராடி வரலாற்றில் இடம்பெற்றுள்ளமை வன்னிமணணுக்கு மட்டுமே உள்ளது. 1811இல் உடையாவூர் எனும் இடத்தில் ஏற்பட்ட போரில் பண்டாரவன்னியன் படுகாயம் அடைந்தான் எனவும், இவனது படைவீரர்கள் படுகாயம் அடைந்தனர். பண்டாரவன்னியனை இவனது படைவீரர்கள் பனங்காமத்துக்கு எடுத்துச் சென்றனர் எனவும், அங்கு இம்மாவீரன் வீரச்சாவு அடைந்ததையும் வரலாற்றில் நாம் பார்க்கிறோம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் பின்னணியில் பண்டாரவன்னியனின் வீரவாழ்க்கை முடிவில்லாத நீண்ட வரலாற்றின் ஓர் அத்தியாயம் என்றே கொள்ள வேண்டும். இந்தியாவில் வீரசுவர்க்கம், ஜான்சிராணி, நானாசாகேப், தாந்திநோபே, சுபாஸ்சந்திரபோஸ்- தமிழகத்தில் வீரபாண்டிய கட்டப்பொம்மன் - இலங்கையில் கெப்பிற்றாறைிப்பொல, வீரபுரானப்பு போன்றவர்களின் வீரவாழ்க்கை ஒரே விதமாக அமைந்திருப்பதைப் பார்க்கிறோம்.

இந்த வகையில் சங்கிலியன், பண்டாரவன்னியன் ஆகியோரது வாழ்க்கை காட்டிக் கொடுக்கும் துரோகிகளால் பாழாகிப் போனதை வரலாறு பதிவு செய்துள்ளது. அதுகூட வரலாற்று நியதியாகவே தொடர்கிறது.

அடங்காப்பற்று வன்னியில் அடங்கிப் போகாத வன்னியர்கள் இருக்கிறார்கள். அடக்குமுறைக்கு அடிபணிந்து போன வன்னியர்களும் இருக்கிறார்கள். காட்டிக் கொடுக்கும் காக்கை வன்னியர்களும் இருக்கிறார்கள். கூடநின்றே குழி பறிக்கும் கூகைக் கூட்டங்களும் இருக்கின்றன. ஆனாலும் என்ன? ஒரு கைலாயவன்னியன், ஒரு பண்டாரவன்னியன் தமது அஞ்சா நெஞ்சம் கொண்ட வீர வாழ்க்கையால் வன்னிப் பிரதேசத்தின் புகழை குன்றில் விளக்காக ஏற்றி வைத்திருக்கிறார்கள். வரலாறு மீண்டும் வரும். - *History repeats itself* என்று சொல்வார்கள். அதற்குக் காரணம் இத்தகைய வீரமுள்ளவர்களது ஆதர்சமும், உந்துசக்தியுமே.

**தென்றலின் தொடர் வருகைக்காகத் தங்களால் இயன்ற பங்களிப்பினை வழங்கி உதவுங்கள்.**

(ஆ-ர்)

08/

# மாணவர்களே! சிறுகதை எழுதுவோம் வாருங்கள்!

- பேராசிரியர். செ.யோகராசா -

சிறுகதை எழுத ஆர்வமுள்ளவர்கள் சிறுகதை வடிவத்திற்குரிய இயல்புகள் பற்றிய தெளிந்த அறிவு பெற்றிருத்தலவசியமாகும். இவ்வாறான தெளிவினை எய்துவதற்கு நாவல் வடிவத்தின் இயல்புகளுடன் - சிறுகதை வடிவத்தின் இயல்புகளை ஒப்பிட்டு அவதானிப்பது பயன் மிகுந்ததொன்று.

மேற்கூறியவாறு ஒப்பிட்டு நோக்குகின்றபோது, நாவல்-மனித வாழ்க்கையின் பல்வகைக் கூறுகளையும் உள்ளடக்கியிருப்பது முதலிற் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகிறது. நாவல் அவ்வாறமைய, சிறுகதையோ மனித வாழ்க்கையின் ஒரு கூறினை மட்டும் உள்ளடக்கியிருப்பது புலப்படும். சிறுகதை புகையிரத வண்டிக்குள்ளிருந்து ஜன்னலூடாக உலகத்தைப் பார்ப்பது என்றும், நாவல் புகையிரதத்திலிருந்து இறங்கி வந்து உலகத்தைப் பார்ப்பது என்றும் கருதப்படுகின்றபோது, மேற்கூறிய வேறுபாட்டிற்கான தாற்பரியம் புலப்படுமெனலாம். எனினும் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் பலரும் இவ்வியல்பு பற்றிய புரிதலன்றி ஒரு சிறுகதையில் ஒன்றிற்கு மேற்பட்ட விடயங்களை எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது.

நாவலிலும், சிறுகதையிலும் பாத்திரங்கள் இடம்பெறுவது நாமறிந்ததே. சமூகம் பற்றி ஆழமாக நோக்கும் நாவலில் பல பாத்திரங்கள் அமைவதும் இயல்பானதே. மேலும் இவ்வாறான பாத்திரங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட குணவியல்புகள் பற்றி வெளிப்படுத்த நாவல் தயங்குவதில்லை. (டால்ஸ் டாயின் சிறந்ததும், மிகப்பெரிய அளவினதுமான **"போரும் அமைதியும்"** நாவலில் நூற்றுக்கணக்கான பாத்திரங்கள் இடம்பெறுவதும், வாசகர்கள் பாத்திரங்களின் பெயர்களை மறந்துவிட நேர்வதும் பற்றிய நினைவு இவ்வேளை ஞாபகத்திற்கு வருகின்றது) மாறாகச் சிறுகதையில் மிகச்சில பாத்திரங்களே நடமாடும். இவ்வாறான பாத்திரங்கள்கூட, முக்கியமான ஒரு குணவியல்பையே புலப்படுத்துவதும், இவ்வாறான ஒரு இயல்பை வலுப்படுத்த-வெளிப்படுத்த- உதவுவனவாகவே ஏனைய பாத்திரங்கள் செயற்படுவதும் மனங்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

நாவல், பாத்திரங்களின் பலவகையான - வெவ்வேறான உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் என்பதும் கவனத்திற்குரியது. மாறாகச் சிறுகதை பாத்திரத்தின் ஓர் உணர்ச்சியைப் பற்றி மட்டுமே வெளிப்படுத்துகிறது! எனினும் இரு பாத்திரங்கள் சிறுகதையில் இடம்பெறும் என்கின்றபோது - முரண்பட்ட நிலையிலிருக்கும் போது இருவேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்த சிறுகதை முற்படும்.

அதுமட்டுமன்று. பாத்திரங்கள் இல்லாமல் நாவல் உருவாக முடியாது. மாறாக சிறுகதை - பாத்திரங்கள் இல்லாமலும் அமையலாம் என்பது இலக்கிய ஆர்வலர்கள் பலருக்கும் தெரியாத விடயமாகிறது.

நாவலின் உருவாக்கம் பற்பல நிகழ்ச்சிகள் கொண்டதாகவோ - பற்பல சூழ்நிலைகள் கொண்டதாகவோ - பற்பல சிக்கல்கள் கொண்டதாகவோ அமையலாம். அவ்வாறு அமைகின்றபோது அவை படிப்படியாக வளர்த்துச் செல்லப்படலாம். மாறாகச் சிறுகதையில் ஒரு நிகழ்ச்சி - ஒரு சூழ்நிலை - ஒரு சிக்கலே இடம்பெற வேண்டும்.

நாவலைப் பொறுத்த வரையில் காலமும், இடமும் முக்கியம் பெறுபவை. காலம் நீண்டதாக அமைவது தவிர்க்க இயலாதது. **"இடம்"** பலவாக அமையவும் முடியும். சிறுகதையில் காலமும், இடமும் வெளிப்பட வேண்டியது அவசியமானதொன்று. காலம் முக்கியம் பெறவேண்டி ஏற்படின் குறுகிய காலமாகவே அது அமைய வேண்டும்.

அதேவேளையில் சிறுகதையைப் பொறுத்த வரையில் அதன் அளவையொட்டிக்காலஅளவு வகுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக:- ஒரு சிறுகதை 15நிமிடத்திலிருந்து 50நிமிடத்திற்குள் படித்து முடித்து விடக்கூடியதாக இருக்க வேண்டுமென்பார் **"ஹட்சன்"** என்ற விமர்சகர்.

நாவலில் இடம்பெறும் வர்ணனைகள் (இடம் பற்றிய, களம் பற்றிய, பாத்திரம் பற்றியதாக) இடம்பெற முடியும். சிறுகதையில் அவை இடம்பெற வேண்டிய அவசியமில்லை செறிவே வேண்டப்படுகிறது.

மேற்கூறியவை அனைத்தையும் விட, **"நாவல் என்பது ஒரு சிறுகதையின் விளக்கமான உரையாகாது"** என்பதனை மனங்கொள்ள வேண்டும். அவ்வாறே, **"சிறுகதை என்பது நாவலின் சுருக்கமான உரையாகாது"** என்பதனையும் நினைவுகூர வேண்டும்.

**(தொடரும்)**

- கன்னிமுத்து வெல்லபதியான் -

# பட்டங்களும் பட்டதாரிகளும்

என்னைக் குருடனாகக்
கூறுகிறார்கள் சிலர்
என்னைச் செவிடனாக
கூறுகிறார்கள் இன்னும் சிலர்
என்னைச் சொத்திக் கையனாக
நினைக்கிறார்கள் பலர்
என்னை முடவனாக
எண்ணுகிறார்கள் இன்னும் பலர்
என்னை மூங்கையனாகவும்
மதிப்பிடுகிறார்கள் ஒரு சிலர்
என்னை மூளையே இல்லாத
வெறும் முண்டமாகவும்
மதிப்பிடுகிறார்கள் அனேகர்
மொத்தத்தில் பைத்தியக்கார
உலகத்தில்–அத்தனை
பட்டங்களுக்கும்
சொந்தக்காரன் நான்
என்னை விமர்சித்து விமர்சித்து
வெற்றிக் கொடிகளை
நாட்டி வருகின்ற
விமர்சக நெஞ்சங்களே.......!
பாசமுள்ள ராசாக்களே!
இத்தனை பட்டங்களையும்
எனக்காக உவந்தளித்த
எனதருமைப் பெரியோர்களே!
இப்பொழுது உங்களைப் பற்றியும்
என்னிடம் கொஞ்சம்
கூறிவிட்டுப் போங்கள்
நீங்கள் யார்?
குருடரா..? செவிடரா..?
முடவரா..? மூங்கையரா..?
மூளையே இல்லாத
வெறும் முண்டங்களா?
ஓ.... உங்களது
பட்டங்களையும்
தராதரங்களையும்
பட்டியலிட்டுக் கூறுங்கள்
பாமாலையும் பாடி
பூமாலையும் சூட்டி–உங்களை
வாழ்த்தி விட்டுப்
போகிறேன் நான்.

# எதை மறப்போம் எங்கழுவோம்!

-எஸ். புஸ்பானந்தன்-



எங்கள் வாசலெல்லாம்
இன்கவிதை நிலா எறித்த
திங்கள் கண்மூடிப் படுத்துக் கிடக்கிறது!

ஊரின் மூலையெல்லாம் உன்பாடல் கேட்கிறது!
கும்மியாய...... வசந்தனாய்...... குழுப்பாட்டாய்......
எம்மூரின் வேராம் ஈரக்கவிதையாய்
ஊரின் மூலையெல்லாம் உன்பாடல் கேட்கிறது!
உலகை நீ மறந்து நீளத் துயில்கிறாய்!

எங்கள் பெரும் சொத்தை
இழந்து தவிக்கிறோம்!
உனக்குத் தொழில் கவிதை
ஊருக்குழைத்தல் என
வாழ்ந்தாய் எம் தலைவ
<u>வாடித்தவிக்கிறோம்</u>

**"தேனதியின்"** கதறலினைக் கேட்டும் கண்மூடி
நீ படுத்துக் கிடப்பதனை ஏற்க மனம் மறுக்கிறது!
ஆயிரமாய் கவிதைப்பூ பூத்திட்ட பெருவிருட்சம்
அவலமாய் சாய்ந்தது ஏன்?
யார் செய்த பாவமிது?

எங்கள் பெரும் கவிதைச் சொத்தை
எங்ஙனம் யாம் மறப்போம்

நீ
பெரும் சபைக்குத் தலைவனாய் பேசுகின்ற பேச்சென்ன......
அருங்கவிதை அரங்கிலே வீசுகின்ற கவிதையென்ன......
சிரிப்பென்ன...... கதையென்ன......
சிறுபிள்ளை போலாகி
கேலி கிண்டல் செய்து கெக்கலிக்கும் அழகென்ன......
எதை மறப்போம் நாம் இங்கு
எதை நினைப்போம் எங்கழுவோம்!

தேன் தமிழில் கவிபூக்கும்
தேசிகன் இல்லா மண்டூர்
சிந்திக்கக் கூடுதில்லை

மனசெல்லாம் கவலை இருள் கவ்வ
மண்டூரின் வாசலெல்லாம் துக்கம் கொடி அசைக்கும்!

தங்கத்தமிழ் கவிதைத் தோப்பிலே
பெருவிருட்சம் தறித்துப் போட்டது ஏன்?
பெருந்தப்பு; நீதியில்லை
எங்கள் வாசலெல்லாம்
இன்கவிதை நிலா எறித்த
திங்கள் கண்மூடிப் படுத்துக் கிடக்கிறது!

**எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள்,**
**கல்வியலாளர்களிடமிருந்து தரமான**
**ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**
**அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்கள்**
**புள்ஸ்கப் தாளில் 04 பக்கங்களுக்கு**
**மேற்படாதிருக்க வேண்டும்.**

(ஆ–ர்)

# கலைகளுக்கெல்லாம் அரசு கவிதை

08

- ஆ.மு.சி.வேலழகன்-

அன்பார்ந்த வாசகர்களே!

**"கலைகளுக்கெல்லாம் அரசு கவிதை"** எனும் தொடர் கடந்த பல மாதங்களாக தடைப்படாமல் வெளிவந்து கொண்டிருக்கிறது. மேலும் 18ஆவது இதழில் (ஆடி-புரட்டாதி)-2012இல் வெளிவந்த **"தென்றல்"** இதழில் கவிதை இலக்கணத்தை மட்டும் படித்தால் போதாது. படிப்பதோடு உங்கள் மனதில் எழும் எண்ணங்களையும், அன்றாடம் காணும் காட்சிகளையும் சிறுசிறு கவிதைகளாக எழுத வேண்டும் என்ற நோக்கில் இரு பெரும் கவிஞர்களான **"பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்"**, **"திமிலைத்துமிலன்"** ஆகியோரது கவிதைகளைக் குறிப்பிட்டிருந்தேன்.

அதில் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் எண்ணக் காட்சியும், கவிதையும் முழுமையாகப் பதிவாகியும், திமிலைத்துமிலனின் எண்ணக் காட்சி மட்டும் பதிவாகியிருந்தது கவிதை பதிவாகவில்லை. எனவே அதனை முதலில் குறிப்பிட்டு மோனைத் தொடை பற்றிக் கூறுகிறேன்.

ஆம்! திமிலைத்துமிலன் அவரிடம் கவிதை இலக்கணம் பயிலும் மாணவர்களை ஒரு மாலைப் பொழுதில் அழைத்துச் செல்கிறார். அந்த மாலைப் பொழுதின் இயற்கைச் சூழலை பின்வருமாறு காட்டுகிறார். அங்கே,

**"நீலவானம் தெரிகிறது**
**பெரிய கருங்கடல்**
**இனிய காற்று வீசுகிறது**
**அலைகள் அடிக்கின்றன**
**கடலைக்காரன் வருகிறான்**
**காகம் பறக்கிறது**
**வெள்ளை மணல்ப் பரப்பு**
**தோணிகள் வருகின்றன**

**கரைவலை இழுக்கிறார்கள்**
**மீன்கள் துள்ளுகின்றன**
**நண்டுகள் ஓடுகின்றன**
**அழகான சிப்பிகள்**
**பசுமையான அடம்பங் கொடிகள்**
**தாழை மரங்கள் அசைகின்றன**
**வெள்ளை நுரைக் குவியல்**
**இராவணன் மீசைகள்"**

இத்தனை காட்சிகளையும் அம் மாணவர்களுக்குக் காட்டியதோடு மட்டும் நிற்காமல், மாணவர்களும் கவிதைகள் எழுதிப் பயில வேண்டும்-என்ற எண்ணத்தில் அந்தக் காட்சிகளையே வைத்து ஒரு சிறிய ஓசை நயத்தோடு கவிதைகளாக வடித்துக் காட்டுகிறார்.

**"தானதான தானன**
**தான தான தானன**
**தானதான தானன**
**தானதான தானன"**

இந்த ஓசை அமைதிக்கேற்ப மேலே காட்டிய காட்சிகளின் சொற்களைக் கொண்டே- அதில் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்து, சிறுசிறு மாற்றங்களைச் செய்து, நீங்களும் கவிதைகள் படைக்க வேண்டும் என்ற நோக்கோடு கவிதை படைத்துள்ளார்.

**"நீல வானம் தெரியுது**
**நீண்டு கிடக்கு கருங்கடல்**
**தாழை மரங்கள் அசையுது**
**தவழ்ந்து காற்றும் தழுவுது**

**காகம் அங்கு பறக்குது**
**கடலைக்காரன் வருகிறான்**
**வேகமாகத் தோணிகள்**
**விரைந்து வந்து சேருது**

**மீன்கள் துள்ளிப் பாயுது**
**வெள்ளை மணலும் விரியுது**

**நாங்கள் பார்க்க ஓடியே**
**நண்டும் பொந்தில் ஒளியுது"**

இவ்விதம் கவிதை புனையலாம்.

இனி மோனைத் தொடை பற்றிப் பார்ப்போம். ஒரு கவிதைக்கு அடிப்படையாக எழுத்துக்கள் இணைந்து நேரசை, நிரையசையாவது போல்-அசைகள் இணைந்து சீர்கள் ஆவது போல், சீர்கள் இணைந்து அடியாகிக் கவிதை உருவாகிறது.

இந்தக் கவிதைக்குள் அல்லது கவிதைகளுக்குள் **"எதுகை", "மோனை"** எப்படி வரும்? எங்கே வரும்? என்பதைப் பார்ப்போம்.

## மோனைத் தொடை

மோனை எனும் சொல்லுக்கு முதல் என்பது பொருளாகும். முதற்சீரின் முதல் எழுத்தோடு, பின்வரும் சீர்களில் ஒன்றிலேனும், பலவற்றிலேனும் முதல் எழுத்து ஒன்றிவருவது-ஒரே எழுத்தாய் வருவது மோனைத் தொடையாகும்.

இப்படி வருவது சீர்மோனை எனப்படும். **"போகாத இடந்தனிலே போக வேண்டாம்."** எனும் வரியில் சீர்மோனை வந்திருப்பதைக் காணலாம்.

### 1.சீர்மோனை

இதனை சற்று விளக்கமாகக் கூறுவதானால் நான்கு சீர்கள் கொண்ட ஒரு கவிதையை எடுத்துக் கொள்வோம்.

**"1சில்லென்று 2பூத்த**
**3சிறுநெஞ்சிக் 4காட்டூடே**
**1நில்லென்று 2 சொல்லி**
**3நிறுத்திவழிப் 4போனீரே"**

இந்தக் கவிதையில் நான்கு நான்கு சீர்கள் வந்த இரண்டு அடிக்கவிதையாகும். இந்த நான்கு சீர்கள் வந்த ஒரு அடியில் மோனை இரு சீர்களில் (**"சில், சிறு"** ) வந்துள்ளது. இதே போல் இரண்டாவது அடியிலும் நான்கு சீர்கள் (**"நில், நிறு"**) வந்துள்ளது. எனவே - இப்படி ஒன்றை விட்டு ஒன்றிற்கு வந்த மோனைக்கும் ஒரு பெயர் இலக்கணத்தில் உண்டு. இதனைப் **"பொழிப்பு மோனை"** என அழைப்பர். சீருக்குச் சீர் வருவதனால் பொதுவாகச் சீர்மோனை என்றாலும், மோனைகள் வரும் சீர்களைக் கொண்டு-ஒவ்வொன்றையும்

இணைமோனை, பொழிப்புமோனை, ஒரூஉமோனை, கூழைமோனை, மேற்கதுவாய்மோனை, கீழ்க்கதுவாய்மோனை, முற்று மோனை என ஏழு வகையாகப் பிரிக்கலாம். இவை ஒவ்வொன்றையும் அதற்குரிய அடிகளைக் கொண்டே பார்க்கலாம்.

## 2. அடிமோனை

அடிதோறும் முதலெழுத்து ஒரே எழுத்தாய் இருப்பது அடிமோனை எனப்படும்.

(எ-கா) **"மாவும் புள்ளும் வதிவயின் படர**
**மாநீர் விரிந்த பூவும் கூம்ப**
**மாலை தொடுத்த கோதையும் கமழ**
**மாலை வந்த வாடை**
**மாயோன் இன்னுயிர் புறத்திறுத்தற்கே"**

இந்த ஐந்தடிப் பாட்டில் ஒவ்வொரு அடியிலும் நெடில் எழுத்தைக் கொண்ட மோனை **"மா, மா, மா, மா, மா"** என அடிதோறும் வந்திருப்பதைக் காணலாம். இது போன்று (மா) வந்த எழுத்தே ஒவ்வொரு அடிதோறும் மோனையாய் வரவைத்துப் பாடுவது வழக்கில் இல்லை என்பதோடு, இது மிகச் சிரமமுமாகும்.

## 3. வழிமோனை

ஒரு அடியில் வரும் சீர்களில் உதாரணமாக- **"அ"** எழுத்து முதலச் சீரில் வருமானால், அதனை அடுத்தடுத்த சீர்களிலும் **"அ"** என்ற எழுத்துதான் வர வேண்டும் என்பதற்கல்ல. அதற்குப் பதிலாக **"ஆ, ஐ, ஔ"** ஆகிய எழுத்துக்களும் வரலாம். இதனாலே இதனை வழிமோனை என்றனர். இந்த நான்கு எழுத்துக்களில் ஏதாவது ஒன்று வரலாம். இதற்கு **"இ"** என்னும் எழுத்தோ, **"ஓ"** என்னும் எழுத்தோ மோனையாக வருதல் கூடாது. இந் நான்கு எழுத்துக்களுக்கு உள்ளே ஒன்றிற்கு ஒன்று மோனையாக வர வேண்டும் என்பதை மறத்தல் கூடாது.

(எ-கா) **"ஆபயன் குன்றும் அறு தொழிலோர் வில் மறப்பர்"**
**"ஐயமும் பிச்சையும் ஆர்தனையும் கைகாட்டி"**
**"ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்புளார் கோமான்"**

**(தொடரும்)**

-ஆனந்தா *A.J.* இராஜேந்திரம்-



# கிறீஸ்து பிறப்பு விழா

நவீன இந்த உலகத்திலே, சுருங்கிப் போன பூகோளத்திலே, அனைத்தும் வியாபார மாகி விட்ட சூழலிலே, தொழில் நுட்பம் மிகைப்பட்டு வளரும் நிலையிலே, கிறீஸ்து பிறப்பு பற்றிச் சிந்திப்பது நல்லதே!

கிறீஸ்து பிறப்பு என்பது ஒரு புராணம் அல்ல சரித்திரம். கிறீஸ்து ஒரு கற்பனைக் கதாபாத்திரமல்ல. நிஜமானவர். சதையும், குருதியும் கொண்ட உடலோடு வாழ்ந்தவர். பிறப்பால் அவர் மனிதரே தவிர, இயல்பால் அவர் இறைவரானார். இறைவனின் அவதாரமாக அவர் பிறக்கவில்லை இறைவனே மனிதனாகப் பிறந்த வரலாறு அவருடையது. கிறீஸ்து பிறப்பு ஒரு திடீர் நிகழ்வல்ல. அது முன் கூறப்பட்ட தகவல்-சம்பவம்.

மாடமாளிகைகள் அவரை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தன. அப்படியொரு நிகழ்வைப் பலரும் எதிர்பார்த்திருந்தனர் காத்துக்கிடந்தனர். அவர் வந்தார்: ஏழையாக-எளியவனாக-சொந்த வீடு இல்லாமல் மாடுகள் உறையும் கொட்டிலில் இரவலாகப் பெற்றுக் கொண்ட தீவனத் தொட்டியில் பாமரராக! எந்தக் குழந்தையும் பிறக்கும்போது யாருக்கும் அச்சுறுத்தலாக இருந்ததில்லை-இருப்பதில்லை.

இவர் வருகைக்காக தொலைதூரத்தில் உள்ளங்கள் எதிர் பார்த்து, அவரைக் கண்டுவிட - பணிந்து போற்றி நிற்க - ஆண்டாண்டு காலமாகக் காத்துக் கிடந்தன. இருந்தாலும் - அவரது சொந்த மண்ணில் பலருக்கு அவர் அச்சுறுத்தலாக இருந்தார். அவர் கையில் வாளுமல்லை - கேடயமுமில்லை. அவர் பிறந்தபோது அடம்பரமும் இருந்ததில்லை.

ஆடு மேய்ப்பவர் தவிர, அவருக்கு ஏவலாட்கள் என யாரும் கூட நின்றதில்லை. ஆனாலும் பெரும் ஞானிகள் எனக் கூறிக்கொண்ட குருக்கள் முடிகொண்ட மன்னர்கள் அவர் பிறந்த செய்தியைக் கேட்டு அச்சமுற்றனர். பச்சிளங் குழந்தையை எதிரியாக எண்ணிக் கொல்ல முயன்றனர். தமது

கரங்களை பாவமறியாத குழந்தைகளின் இரத்தத்தில் தோய்த்துப் பாவங் கொண்டனர்.

அவர் பிறப்பில் உயிரியல் பிழைத்துப் போனது. ஒரு ஆணின் பங்களிப்பில்லாமல்-தாய் வயிற்றில் கருவான பெருமை அவருக்குரியது. கன்னிமை கழியாத கன்னிப் பெண்ணான மரியாளுக்கு மகனாகப் பிறக்கக் கடவுள் அவளிடமே அனுமதி பெற்ற பெருமை அவரது அன்னைக்குரியது. அவரது பிறப்பின் நோக்கம் விளங்கி, தனக்கேற்படக் கூடிய அவமானங்கள்-அவதூறுகள்-அவச்சொற்களைக் கூட மனதிற் கொள்ளாமல் சம்மதம் சொன்னதால் அவரது அன்னை இந்த உலகிலே பிறந்த பெண்களுக்குள்ளே இறைஆசீர் அதிகம் கொண்ட பெண் ஆனார்.

வைத்தியசாலையில் பிறந்த குழந்தையைக் கூட உயிராக அணைத்துக் கொண்டு தாய் அலுங்காமல்-குலுங்காமல் வீட்டுக்குத்தான் கொண்டு வருவாள். ஆனால் கிறீஸ்துவின் தாயோ குழந்தை உயிருக்காக கழுதைமேல் ஏறி, அனாதரவாக நாட்டை விட்டே ஓடினாள்.

அவர் பிறந்த வேளையில் காலம் பெறுமானமற்றுப் போனது. சரித்திரம் இரண்டாகப் பிளவுண்டது. கிறீஸ்துவுக்கு முன்-கிறீஸ்துவுக்குப் பின் என்றும் பேர் கொண்டது.

பூவுலகில் நல்மனமாந்தர்க்குச் சமாதானம் வர அவர் வந்தார். அதனால் உன்னதத்தில் இறைவன் மகிமை பெற்றார்.

அவர் கொணர்ந்த வேதம் புதிது! அவர்பாணி வித்தியாசமானது! மனிதனுக்காக மனிதனாகி, அடிமை போல வேடங்கொண்டு, தரணியில் அவதரித்த அவதார புருஷர் அவரே!


நாஸ்தீகனோ, ஆஸ்தீகனோ எவருக்கும் அவர் பொதுவானவர். அவர் பிறப்பின் காலம் என்றாலே மதஎல்லைகள் - மொழி எல்லைகள் கடந்த - சமூக பேதங்களுக்கு அப்பாற்பட்டவர் என்பதை உற்சாக உணர்வு எல்லோர் மனதிலும் பிறப்பதைக் கொண்டே அறிந்து கொள்ளலாம்.

இன்று உலகில் அவர் பிறப்பையும் வியாபாரமாக்கி விட்டார்கள். இந்த நிலையில் கிறீஸ்து பிறப்புப் பற்றிச் சிந்திப்பது அவர் பிறப்பின் தாற்பரியத்தை இத்தனை சலசலப்புக்களின் மத்தியிலும் மனதில் அசைபோட்டுப் பார்ப்பது சாலப் பொருத்தமானதாக அமையுமல்லவா?

## –நீத்தார் நினைவு–

# சமூகத்துக்காகத் தன்னை அர்ப்பணித்த பெருமகன் அமரர் இ.குமாரசுவாமி!!!

-பழுவூரான்-



கிரான்குளம் கிராமத்தில் **"தலைவர்"** என்ற மதிப்புப் பெயருடன் விளங்கிய அமரர் இ. குமாரசுவாமி அன்பு, பண்பு, சமூக விழுமியங் களைத் தன்னகத்தே கொண்டிருந்தார்.

இவர் ஆலய திருப்பணிகளிலும் தனது ஈடுபாட்டை வெளிப்படுத்தினார். இதற்கமைய கிரான்குளம் கணபதிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை வண்ணக் கராகத் தனது உயிர் பிரியும் வரை செயற்பட்டதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

இவற்றோடு இவர் அரசியல் சார்ந்த சாணக்கியமும், பொதுத்துறை சார்ந்த உத்வேகமும் கொண்ட ஒருவராகத் திகழ்ந்தார். தான் பொறுப்பெடுத்த காரியங்களை செவ்வனே செய்து வெற்றி கண்டவர்.

மண்முனைப் பற்றுப் பிரதேச கல்வி அபிவிருத்திச் சபையின் மூலம் அவர் செய்த தொண்டுகள் அளப்பரியன. ஏழைமாணவர்கள் கல்வியில் உயர் நிலையை அடைய வேண்டும் என்ற நோக்கோடு பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டார்.

இத்தனைக்கும் மேலாக மண்முனைப் பற்றுச் செஞ்சிலுவைப் பிரிவின் தலைவராகவும், மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் பொருளாளராகவும் பின்னர் கிளைக் குழுவின் கௌரவ உறுப்பினராகவும் பதவி வகித்திருந்தார்.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியின் அடிப்படையில் தனது ஆயுட் காலத்தின் பெரும் பகுதியை மக்களுக்காகவே அர்ப்பணித்த அமரர் இளையதம்பி. குமாரசுவாமிக்கு **"தென்றல்"** தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

# புதிய வரவுகள்

**நூல் :** வள்ளி அம்மன் நாடகம்

**ஆசிரியர் :** கலாபூஷணம் தாழை செல்வநாயகம்

**முகவரி :** கல்குடா வீதி




ஏடுகளிலும், கையெழுத்து வடிவிலும் காணப் பட்ட வள்ளி அம்மன் நாடகத்தை அனைவரும் பயிலும் வண்ணம் அச்சு வாகனம் ஏற்றியிருப்பது வரவேற்கத்தக்கது.

இச் செயற்பாட்டின் ஊடாக க.பொ.த(உ/த), பல் கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு புத்தாக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

---

**நூல் :** "கதிர்காமப் பாத யாத்திரை எழுச்சி"

**ஆசிரியர் :** மு. பவளேந்திரன்

**வெளியீடு :** நியூ ஒலிம்பிக் விளையாட்டுக் கழக கலாசாரப் பிரிவு

**முகவரி :** "மலரில்லம்", செக்கடி வீதி, களுவாஞ்சிகுடி.




குடும்ப சமேதராய் அருள்பாலிக்கும் முருகக் கடவுளின் திருவுருவத்தை அட்டைப் படமாகக் கொண்டு இந் நூல் முழுப் பிரசவமாக வெளிவந்துள்ளது. இந்நூலாசிரியர் நாடக, இலக்கியத்துறையில் கொண்டுள்ள ஆர்வங் காரணமாக இந் நூலைப் படைத்துள்ளார்.

இது கதிர்காம யாத்திரை மேற்கொள்பவர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.


# படமும் - பதிவும்

- ரவிப்ரியா -






எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் அண்மையில் தேவநாயகம் கலையரங்கில் நடத்திய தமிழியல் விருது வழங்கும் நிகழ்வில் மூத்த எழுத்தாளர் வவுனியூர் இரா. உதயணன் உரையாற்றுவதையும், கிழக்கிலங்கை பாலர் பாடசாலை கல்விப் பணியகத் தலைவர் பொன். செல்வநாயகம் **"காணா இன்பம் கனிந்ததேனோ.."** எனும் நூலை எழுதிய ஆ.மு.சி வேலழகனுக்கு தமிழியல் விருது வழங்குவதையும் படங்களில் காணலாம்.



மட்/வின்சன்ட் மகளீர் உயர்தர தேசிய பாடசாலை வருடா வருடம் வெளியிடும் **"பேழை"** சஞ்சிகையின் வெளியீட்டு விழா அண்மையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் த.யுவராஜன் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.



மட்டக்களப்பு பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தில் இடம்பெற்ற ரக்ஷபந்தன் பண்டிகையில் ஆசிய பசுபிக் மற்றும் அவுஸ்திரேலியப் பிராந்திய பொறுப்பாளர் இராஜயோகினி வைத்திய கலாநிதி தீதீ நிர்மலாஜீ உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.



கல்லடி **"அக்ஷன் பிளே"** பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் சிறுமிகளின் உடற்பயிற்சி நிகழ்வைப் படத்தில் காணலாம்.




மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் நடத்திய 46ஆவது உலகத் தொடர்பு தினவிழாவில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பொன்னையா யோசப் ஆண்டகை இலக்கியப் பணியைப்பாராட்டி மூத்த எழுத்தாளரும், **"தென்றல்"** சஞ்சிகை ஆலோசகருமான இரா. நாகலிங்கத்துக்கு விருது வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.




சுவாமி விவேகானந்தரின் 150ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு கிரான்குளத்திலிருந்து ஆரம்பமான விழிப்புணர்வு ஊர்வலத்தையும், அதனைத் தொடர்ந்து ஆரையம்பதி நந்தகோபன் மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.




கிழக்கு மாகாண பாலர் பாடசாலை கல்விப் பணியகத்தினால் மட்டக்களப்பு தேவநாயகம் கலையரங்கில் இடம்பெற்ற நிகழ்வைப் படத்தில் காணலாம்.





கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சும், மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேச செயலகமும் இணைந்து பட்டிருப்பு தேசிய பாடசாலை கலையரங்கில் நடத்திய கூத்துப் பயிற்சிப் பட்டறையின் போது, உதவிப் பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதன் மங்கல விளக்கேற்றுவதையும், பயிற்சிப் பட்டறையை அண்ணாவியார் வீ. இராசமாணிக்கம் நடாத்தி வைப்பதையும் படங்களில் காணலாம்.

பெரியகல்லாறு மத்திய கல்லூரி பூம்பந்தாட்ட 15 வயதிற்குக் கீழ்ப்பட்ட அணி மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தையும், 19 வயதிற்குக் கீழ்ப்பட்ட அணி இரண்டாம் இடத்தையும் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளதை கௌரவிக்கும் வகையில் முதலாம் இடத்தைப் பெற்ற அணிக்கு கல்லூரியின் முதல்வர் கே. நல்லதம்பியும், இரண்டாம் இடம் பெற்ற அணிக்கு பயிற்றுவிப்பாளர்களும் வெற்றிக் கிண்ணங்களை வழங்கி வைப்பதையும் படங்களில் காணலாம்.




இன்றைய நவீன யுகத்தில் பல்வேறு பரிணாம மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் அம்மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் எம்மை அழகுபடுத்த வேண்டிய தேவையுள்ளது. இந்த விடயத்தைக் கருத்திற் கொண்டு **"தென்றல்"** இவ் இதழில் இருந்து அழகுக்கலை தொடர்பான குறிப்பை எமது வாசகர்களுக்காக வழங்குகிறது. (ஆ+ர்)

- ஆ.தாட்ஷாயினி- Diploma in Beauty Culture - இருதயபுரம்.

## முக்கிய அழகுக் குறிப்புகள்

1. பருவைப் போக்குவதற்கான சிறந்த வழி பச்சைப் பயறு அல்லது வெந்தயம் வெட்டிவேர் இவற்றை நன்றாக அரைத்து pack ஆக பாவிப்பதன் மூலம் விரைவிலேயே நல்ல தெளிவான சருமம் கிடைக்கும்.

2. பருவந்த அடையாளத்தைப் போக்குவதற்கு ஆரஞ்சு தோல், அரைத்த கசகசா, சந்தணம் இவை மூன்றையும் கலந்து பருவந்த தடத்தின் மேல் பூசிவர நாளடைவில் அடையாளங்கள் மறைந்து விடும்.

3. மென்மையான முகம் வேண்டுமானால் பீற்றூட்சாற்றுடன்-தேனைக் கலந்து பூசி 15 நிமிடத்தின் பின் கழுவி விடவும்.

4. வெந்தயத்தை இரவில் ஊறவைத்து, 1கப் மோரில் கலந்து குடித்து வர உதடு கறுப்பு மறைந்து விடும்.

5. ஆரோக்கியமான கேசத்திற்கு காய்ந்த ஆரஞ்சு தோல், வெந்தயம், பிஞ்சுகடுக்காய், வால்மிளகு, பச்சைப்பயறு இவற்றைப் பொடி செய்து, தலைக்குப் pack ஆக இட்டு அலசிவர பட்டுப் போன்ற கூந்தல் கிடைக்கும்.

# நாட்டாரியல் ஓர் ஆய்வு

கலாபூசணம் ஆரையூர் அருள்

தாய்மையுணர்வு பளிச்சிட, உவமையணியும், உருவக அணியும் கூடிக் குலாவிக் கும்மாளமிடுவதை பின்வரும் தாலாட்டு துலங்க விளங்க வைக்கின்றது.

"ஓராரே ஓரகண்டே
ஓராட்டக் கேளாயோ..

பிள்ளையில்லா அகமதுசா
பெருந்தவத்தால் வந்துதித்த
வள்ளல் என்னும் அப்பாசே
வளர்பிறையே நீ நித்திரைசெய்

பாலுக் கழுகிறதோ கண்டார்
பசிக்கிறதும் கேட்கிறதோ
தாலாட்டச் சொல்கிறதோ-என்
நாயகமே நித்திரைசெய்

..................................

சிற்றெறும்பு, வண்டு, கொசு
தேள், மூட்டை, வெண்கறையான்
குத்தினதோ இத்தனையும்
குலக்கொழுந்தே நித்திரைசெய்

(நிந்தவூர் மரியாங்கண்டு மீராலவ்வை)

தாயொருத்தி தன் சேய் மேல் அன்பகத்தருவி அணையுடைத்துப் பாய பின்வரும் முன்னிலைப் பெயர்களால் அழைத்து, மகிழ்ந்து தாலாட்டுவதை நிந்தவூர்.மர்ஹூம்.மீரா உம்மா சின்னத்தம்பி பின்வருமாறு தாலாட்டுகிறார்.

"ஓராரோ...ஓரகண்டே...நீ
ஓராட்டக் கேளாயோ...
என்கண்ணே...நீயுறங்கு
என்கண்மணியே...நீயுறங்கு
பாலுக்கோ நீயழுதாய்?-என்ரவாப்பா
பசிக்கிதென்றோ... நீயழுதாய்

**தேடாத திரவியமே... என்ரவாப்பா**
**தேன் தேடாப் பாலகனே**
**வாடாத பூவே - என்ரமகனாரே**
**வதங்காத மல்லிகையே...**

**பூவே, நீ புலம்பாதே-என்ரமகனார்**
**பூ மலரே வாடாதே...**

**சாதிக்குலமே... என்ரமகனார்**
**சந்தனப் பூ மேனியரே..."** என் கண்ணே, கண் மணியே, என்ர வாப்பா, தேடாத்திரவியமே, வாடாதபூவே, வதங்காத மல்லிகையே, சாதிக்குலமே, சந்தனப் பூ மேனியரே என்ற முன்னிலைப் பெயர்கள் தெட்டத் தெளிவாகத் தொட்டுக்காட்டி நிற்கின்றன. இயற்கையுடன் சமூகத்தையும் உணரவைக்கும் வகையில் கவியர் புதுவை இரத்தின துரையின் தாலாட்டு அமைந்துள்ளது.

**"ஆராரோ ஆரிவரோ**
**ஆராரோ ஆரிவரோ**
**ஆகாயப் பூச்சிரிக்க**
**அழகு நிலா விளக்கெரிக்க**
**ஓயாமல் அழுவ தேனடி-கண்ணே**
**உலகத்தை நிமிர்ந்து பாரடி"**

பிள்ளைகளின் விளையாட்டுப் பாடல்கள்:-

கிராமங்களில் குழந்தைகள், சிறுவர்கள் தம்மத்தியில் பல விளையாட்டுக்களை விளையாடுகின்றனர். குழந்தைகளுக்கு தாய் அல்லது சகோதரங்கள், பெரியவர்கள் பாடக் குழந்தைகள் விளையாடுகின்றன. சிறுவர்கள் தாங்களே பாடிக்கொண்டு விளையாடுகின்றனர். இத்தகைய பிள்ளைகளின் விளையாட்டுப்பாடல்கள் கிராமத்துக்குக் கிராமம், இனத்துக்கினம், சாதிக்குச்சாதி உட்கருத்தொன்றாயினும், தங்கள் தங்கள் பண்பாடு, கலாச்சார, விழுமியங்கழுக்கமைய வேறுபடுவனவாகவும், சிலபொதுத்தன்மையுடையன வாகவும் அமைந்திருக்கும். குழந்தைகள் சிரித்து விளையாடிக் கொண்டிருக்கும் போது பெற்றோர்கள் செல்லங்கொஞ்சுவார்கள். பிள்ளை சாய்ந்தாடும், தலையாட்டும், கைகொட்டும் இத்தகைய செயற்பாடுகளைப் பார்த்து பெற்றோர்கள் அகமகிழ்வர். எளிய இனிய அமைப்பில் பாடுவர். கடினயாப்பிலக்கண விதிகளிலிருந்து விலகி ஆகாயத்தில் அங்கு மிங்கும் சுதந்திரமாகப் பறந்து திரியும் வானம்பாடிகளாக களங்கமற்ற அமைதியாக ஓடிக் கொண்டிருக்கும் தெளிந்த

நீரோடைகள் போல் இப்பாடல்கள் இருக்கும். பிள்ளைகள் சாய்ந்தாடுதலைக் கண்ணுற்று

**"சாஞ்சங் கண்டே சாஞ்சம்**
**சாயமயிலாரே சாஞ்சம்**
**வட்டிக்கும் சோத்துக்கும் சாஞ்சம்**
**வாழைப்பழத்துக்கு சாஞ்சம்**
**.................................**
**................................."** என்று ஆரம்பத்தில் பாடப்பட்ட இப்பாடலின் திருத்தமே தற்போது படிக்கப்படும்

**"சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு**
**தாமரைப் பூவே சாய்ந்தாடு**
**குத்து விளக்கே சாய்ந்தாடு**
**கோவில் புறாவே சாய்ந்தாடு**
**பச்சைக் கிளியே சாய்ந்தாடு**
**பவளக் கொடியே சாய்ந்தாடு**
**சோலைக் குயிலே சாய்ந்தாடு**
**தோகை மயிலே சாய்ந்தாடு**
**கண்ணே மணியே சாய்ந்தாடு**
**கண்டேதேனே சாய்ந்தாடு**
**கனியே பாலே சாய்ந்தாடு"** என்று தமிழர்களும்

**"சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு**
**அண்ணல் முகம்மது முன்னாலே**

**சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு**
**அழகு நிலவே சாய்ந்தாடு**

**சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு**
**வட்டிலுள் சோற்றுக்குச் சாய்ந்தாடு**
**சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு**
**வாழைப் பழத்துக்கும் சாய்ந்தாடு**
**.................................**
**................................."**

என்று கிழக்கிலங்கை முஸ்லிம்களும் பாடுகின்றனர்.

பிள்ளை ஆனை போல தன் உடம்பு முழுவதையும் சேர்த்து ஆடுதலை அவதானித்த கிராமத்து பெற்றோர்கள்

**"ஆனை ஆடுவான் தம்பி ஆனை ஆடுவான்**
**என்னானை அது பொன்னானை**
**எங்கள் குலத்துக்குக் கரசானை**
**முத்துக் கொம்பன் ஆனைக்குட்டி**
**முதுகு சொரியு மானைக்குட்டி**
**.................................**
**................................."** என்றும் பாடப் பிள்ளை மகிழ்ந்து ஆடத் தங்கள் மனக்கவலைகளையும் மறப்பர்.

பிள்ளைகள் தங்கள் கைகளைச் சேஉத்துத் தட்டுவதைச் சப்பாணி கொட்டுதல் என்பர். தொடர்ந்து பிள்ளைகள் சப்பாணி கொட்ட

**"சப்பாணமாந் தம்பி சப்பாணம்**
**செப்பு நிறைந்த கையாலே**
**செண்பகம் பூத்தொரு கையாலே**
**முத்துப் பதித்ததோர் கையாலே**
**மோதிரம் போட்டதொரு கையாலே**
**முழங்கிக் கொட்டுமாம் சப்பாணி"** என்று பாடுவர்.

கிட்டியடித்தல்:- இவ் விளையாட்டைச் சிறுவர்கள் இரண்டு குழுக்களாகப் பிரித்து பெரியதடியொன்றை எடுத்து அதைத் தாய்ப்பொல் (கிட்டி) என்றும் குட்டித்தடி (குட்டிப்பொல்) அதாவது தாய்ப்பொல்லின் மூன்றில் ஒரு பங்கு குட்டிப்பொல்லின் நீளமாயிருக்கும். பலமுறை விளையாடிக் குறிப்பிட்ட எண்ணிக்கையை பெற்றதும் **"பாட்டம்"** என்பது மூச்சிவிடாமல் பாடிக்கொண்டு ஓடுவது. அப் பாடல்கள் பின்வருமாறு

**"கவடியடிக்கக் கவடியடிக்கக்**
**கால்கை முறியக் கால்கை முறியக்**
**காலுக்கு மருந்து தேடிக்கட்டு தேடிக்கட்டு"** மற்றும்

"ஆலையிலே சோலையிலே
ஆலங்காடிச் சந்தையிலே
கிட்டிப் புள்ளும் பம்பரமும்
கிறுகியடிக்கப் பாலாறு,

பாலாறு, பாலாறு இப்பாடல் கிழக்கு மாகாண சி.யோகேஸ்வரியும் பின்வரும் பாடலை அதே பகுதியைச் சேர்ந்த அப்துல் சிகானாவும் வாய்மூலம் பாடக்கேட்டவையாகும்.

(தொடரும்)

கலாபூஷணம் தாழை, செல்வநாயகம்

# பரிசாரியார வீடு

"பாரத தேசத்திலிருந்து ஈழ நாட்டிற்கு வந்த ஒரு முனிவர் சிறுநீர் கழிப்பதற்குக்கூட இடமில்லாது அவதியுற்றாராம். பார்த்த இடங்களிலெல் லாம் மூலிகைச் செடிகளாகவே இருந் தனவாம். அதனால் தனக்கு எங்கும் சிறுநீர் கழிக்க முடியாது, என்று கூறினாராம்" -அத்தகைய சிறப்புமிக்க மூலிகைகள் வளரும் தேசம் எமது தேசம்"
– (ஓர் அறிஞர்)–



அந்த வீதியால் போவோர்களின் மூக்குத் துவாரங்களை ஏதோ அதிசயமான மூலிகைகளின் மணங்கள் துளைத்தெடுக்கும். அப்பொழுதுதான் அந்த வீட்டி னைத் திரும்பிப் பார்க்க வேண்டும் போல் தோன்றும்.

அந்த வீட்டிலிருந்து வரும் வாசம் புனிதமானது. தேவலோகத்திலிருந்து கூட, அத்தகைய சிறப்புமிக்கதொரு வாசனை எழாது. சைவக் கோயில்களின் பக்கமாகப் போனீர்களென்றால், அதே போன்றதொரு மணம்தான் வீசும்.

பள்ளிவாசல்களின் பக்கமும் இருந்து எழும் ஒரு வகைச் சந்தணப் பொடிகளின் வாசனைதான் அந்த வீட்டிலிருந்து வீசுகின்றது.

அந்தோனியார் கோவிலுக்குள் சென்று அமர்ந்து பாருங்கள். **"பாதிரியார்"**

ஆராதனை செய்யும் வேளையில், சங்கிலி பொருத்திய ஒரு கிண்ணத்தில் குங்கிலியம் போன்ற ஒரு வகைச் சுகந்தத்தை வலம்-இடமாக ஆட்டிக் கொண்டிருப்பார்.

அதுவும் அந்த வீட்டின் மணம் தான் **"பரிசாரியார் பத்தக்குட்டியின்"** வீட்டிலிருந்து வரும் மூலிகைகளின் வாசனையானது அந்தக் கிராமத்தின் நாலாதிக்குகளுக் கும் பரவிச் செல்லும். அந்தப் பிரதேசத்தில் பெயரும், புகழும் பெற்ற வீடு என்று சொன்னால், அது பரிசாரியாரின் வீடுதான் ஆடம்பரமில்லாத மனிதர் அவர். நாலுமுழ மல்வேட்டித்துண்டும் தோழில் குரக்கன் நிறத்திலான சால்வைத் துண்டும் அணிந்திருப்பார். காட்டுக் கம்புத் தடிகளால் கட்டப்பட்டிருக்கும் அவரது வேலியின் கடப்படியில் **"பத்தக்குட்டிப் பரிசாரியார் வீடு"** பொறிக்கப்பட்ட பெயர்ப் பலகையுள்ளது. அது அவருக்குக் கிடைத்த விருது என்று கூடச் சொல்லலாம்.

இப்போதுள்ள பரிசாரிமார்கள் நோயைக் குணப்படுத்தித் தருவேன். இவ்வளவு பணம் தரவேண்டும்.

என்று கேட்பார்கள். ஏழை எளியவர்கள் கூட, **"வேன்"** பிடித்து ஆயிரக்கணக்கில் பணம் செலவு செய்து **"பழகஸ்வெவ", "கொறிவில்"** போன்ற இடங்களுக்கு வைத்தியர்மார்களைத் தேடிச்செல்ல வேண்டிய நிலையிலும் உள்ளனர்.

இந்தப் பரிசாரியார் தன்னிடம் எதையும் கேட்கமாட்டார். என்ன நடந்தது? என்ன நோய்? என்று மாத்திரம் கேட்டு நோயைக் குணப்படுத்துவார்.

பரிசாரியார் வீட்டுக் கடப்படியிலிருந்து, ஒரு காகம் காலை தொடக்கம் இடைவிடாது கத்திக் கொண்டிருக்கிறது.........

**"யாரோ ஒரு பெரிய நோயாளி வரப் போகிறார் போலிருக்கிறது........."**

பரிசாரியார் வீட்டில் வாடிக்கையாகத் தங்கியிருக்கும் ஒரு நோயாளி இப்படிக் கூறினார்.

காக்கை கத்துவதையும் அல்லது பல்ல நச்சரிப்பதையும்-சாரை, பூனை குறுக்கறுத்துச் செல்வதையும் சகுணப் பிழையாகக் கொள்பவர்கள் எமது மக்கள். **"நரி முகத்தில் முழித்து விட்டுச் சென்றால் நல்ல சகுணம்"** என்றும் கூறுவார்கள்.

அப்படியென்றால் நாய், பூனைகளை வீட்டில் செல்லப் பிராணிகளாக வளர்ப்பதைத் தவிர்த்து - இவர்கள் நரிகளை வளர்க்கலாம் தானே..........?

**"நமது மக்கள் கலாசாரம், பண்பாடு எல்லாவற்றையும் மறந்து**

**விட்டார்கள். வாங்கிய அடி, உதைகளையும் - சகுணம் பார்ப்பதையும் மாத்திரம் இன்னும் மறக்காதுள்ளார்கள்"** என்று தமாசாகக் கூறினார் படுக்கையில் கிடந்த ஒரு நோயாளி.

காகம் வீட்டின் முன்னால் இருந்து கத்துவதில் ஏதோ உண்மைதான் இருக்கிறது என எனக்குத் தோன்றுகிறது. அந்தக் காலத்தில் எனது தாய் சொன்னார் **"கடப்படியிலிருந்து காகம் கத்திக்கொண்டிருக்கிறது. யாரோ விருந்தாளி வரப்போகிறார் என்று........"**

நான் அதனைக் கணக்கில் எடுக்கவில்லை.

சிறிது நேரம் கழிந்து, எங்களது **"குடிவீட்டு வண்ணான்"** குப்புசாமி துணிமாராப்புடன் வீட்டிற்கு வந்து விட்டான். அழுக்குத் துணிகளை அவனிடம் கொடுத்து அனுப்பி விட்டேன். அன்றிலிருந்து காகம் கரையும் சாத்திரத்தில் எனக்குப் பூரண நம்பிக்கை.

பரிசாரியார் வீட்டின் பின்புறமாக ஒரு மூலிகைத் தோட்டம் உள்ளது. அங்கு எல்லா வகையான மூலிகைச் செடி, கொடிகள் எல்லாம் செழித்து வளர்ந்து நிற்கின்றன. காவிளா, கரையாக்கன், சித்திரப்பாலாவி, எருக்கு, சேனை, சோத்துக்கத்தாழை, கற்பூரவள்ளி, பட்டிப்பூச்செடி, முடி தும்பை, கீழ்காய்நெல்லி, பால்அறுகு, ஆடாதோடை, இஞ்சி, கரிசாலங்கண்ணி, ஊமத்தை, குப்பைமேனி ஆகியனவும் வேலியைச் சுற்றி கொவ்வை, குறிஞ்சா, தூதுவளை, சாத்தாவாரி, கார்த்திகை, பிரண்டை என்றெல்லாம் கொடிவகைகள் அழகாகக் காட்சியளிக்கும். எனக்குத் தெரிந்தவற்றை மாத்திரம் கூறினேன். பெயர் தெரியாத மூலிகைகளும் பரிசாரியாரின் வீட்டை அழகுபடுத்திக் கொண்டிருக்கின்றன. பரிசாரியார் வீடு அவ்வளவு பிரமாண்டமானதல்ல.......... ஓலைக் குடிசைதான். அவர் வைத்தியம் பார்க்கும் குடிசை வைக்கோலால் வேயப்பட்டது. அது எப்படியென்றால், மட்டக்களப்பு நகரில் பொது நூல் நிலையத்துக்கு அண்மையில் அமைந்துள்ள **"பிரட்மன் தண்ணீர்ப் பந்தல்"** வடிவில் வட்டமாக அமைக்கப்பட்டுள்ளது. இவற்றினை விட, அம்பலம் போன்றதொரு வடிவில் நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறும் கொட்டில் ஒன்றுமுள்ளது. அந்தக் கொட்டிலுக்குள் சாதி,மதம்,பால் பேதமற்ற நோயாளர்கள் தங்களை மறந்த நிலையில் மனம் விட்டுக் கதைத்துக் கொண்டிருப்பார்கள்.

பரிசாரியார் ஐயா! பரிசாரியார் ஐயா! எனக் கூப்பிட்டவாறு ஒரு வாலிபன் மோட்டார் சைக்கிளில் வந்து அங்குள்ள நரைத்த கிளவியின், தலையைப் போன்ற

தோற்றத்தில் பூத்துக்கிடந்த அகத்தி மரத்தின் நிழலில் மோட்டார் சைக்கிளை நிறுத்துகிறான்.

பரிசாரியார் சத்தங்கேட்டு வெளியே வந்து வழமைபோல் அவனைப் பார்த்ததும், மௌனியாக நிற்கிறார்.

ஒருவரின் முகத்தைப் பார்த்ததும், நோயாளியின் நோய் இன்னதுதான் என்றறியும் ஆற்றல் மிக்கவர்.

**"மோட்டார் சைக்கிளில் பிரண்டு எழும்பின நீயா?........ இடுப்பு வருத்தமா?"** என்று சரியாகக் கேட்டு விட்டார்.

அவனும் **"வேலிக் கட்டையில் ஒட்டியிருக்கும் கரட்டி ஓணான் மாதிரி"** தலையை ஆட்டினான்.

தூள் முடிச்சு ஒன்றும், ஒரு குப்பியில் மூலிகை எண்ணையும் கொடுத்து,சூடாக்கி அடிக்கடி நோவுள்ள இடத்தில் பூசு சரியாகி விடும் எனக் கூறினார்.

அவன்........ காசு........ என்று முனகுகிறான்.........

நான் உன்னிடம் காசு கேட்டேனா?............ நோயாளியின் சந்தோஷம் தான் எனக்குப் பணத்தை விடப்பெரியது. பொதுச்சேவை செய்வதுதான் எனது குறிக்கோள்............

பரிசாரியார் பற்றிய விபரணம் இதைவிட உங்களுக்குத் தேவையா? **"பரிசாரியார் மனைவி புளுத்துச் செத்தாளாம்"** என்றொரு பழமொழி தமிழில் உள்ளது. இதில் எவ்வளவு உண்மையுள்ளதோ... எனக்

குத் தெரியவில்லை. **"ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்"** என்ற பழமொழி தெரியும்.

ஆயிரம் வேர்களின் தன்மை பற்றி அறிந்தவன்தான் வைத்தியம் பற்றிப் பாதியளவு தெரிந்தவன். இரண்டாயிரம் வேர்களின் தன்மை பற்றிப் படித்தவன் தான் பூரணமான வைத்தியன்.

பத்திரிகை ஒன்றின் நேர்காணலுக்காக பரிசாரியார் வீட்டுக்குச் சென்றேன். அவரது வீட்டில் வாகடப் புத்தகங்கள், ஏடுகள், பாம்பு வைத்திய நூல்கள், வசியநூல்கள் ஏராளமாகக் கிடந்தன. அலுமாரிகளில் அல்ல...... உரவேக்குகளில் கட்டப்பட்டு மூலையொன்றில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

சூறாவளியில், சுனாமி வெள்ளத்தில், வன்செயலில் இடம் பெயர்ந்தபோது அரைவாசிப் புத்தகங்கள் தொலைந்து விட்டன. மிஞ்சிய புத்தகங்களே இவை என்று உதறிக் காட்டினார்.

நான் **"பரிசாரியார் கத்தறையில்"** ஏழாவது பரம்பரையைச் சேர்ந்தவன். பல்லி தொடக்கம் பாம்பு வரையும், மந்திர சூனியம், பில்லி சூனியம் அனைத்தும் படித்துள்ளேன்.

கடப்படியில் **"ஆட்டோ"** ஒன்று இரைச்சலுடன் வந்து நிற்கிறது. அவசர அவசரமாக அம்மணக் கோலத்தில் எட்டு வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவனை இருவர் சுமந்து உள்ளே வருகிறார்கள்.

அவனது வாப்பாவும், உம்மாவும் வெளிநாட்டில் வேலை செய்கிறார்களாம். கொய்யாமரத்தில் ஏறி விழுந்து-கையும், காலும் உடைந்து துாங்குகிறது-என்று கூறினர்கள்.

**"வேட்டை நாயிடம் சிக்கிய உடும்பின் நிலையில்"** எனது மனநிலை ஆகிவிட்டது.

எனது நேர்காணலுக்கு முத்தாய்ப்பு!

அங்கு நடப்பவற்றை நோட்டமிட்டுக் கொண்டிருந்தேன்.

அந்தச் சிறுவனால் உடுப்புப் போடக்கூட முடியாத நிலை!

அங்கு கிடந்த நோயாளர்கள் சுற்றிவர நிற்கிறார்கள்.

பரிசாரியார் வைன் பண்ணிய பொம்மைபோல் இயங்கிக் கொண்டிருக்கிறார்.

மூலிகைகள், இலைகள் சிலவற்றை பொறுக்கி எடுத்து, அங்கு வேலை செய்யும் பொட்டை ஒருவரிடம் துாளாக இடிக்குமாறு கட்டளையிடுகிறார்.

மருந்தினைத் தயார்படுத்தி, தலைவாழையிலையினை வாட்டி எடுத்து, அதன்மேல் வைத்து, முறிந்த இடங்களில் சுற்றிச் சேலையாலும் கட்டி விடுகிறார்.

அவர் கட்டிய மருந்து உருக்கு மருந்து.

அவன் ஓலைப்பாயில் உறங்கி விட்டான்.

நித்திரையில் வாய் பிதற்றுகிறான்.

உம்மா எனக்குச் சோறு தாவன்.... உம்மா ஊரில் இருந்தால் தானே?

பிள்ளைகளைப் பெற மட்டும் தான், அவர்களுக்குத் தெரியும். அவர்களை வளர்த்து ஆளாக்கத் தெரியாது.

மனைவி வெளிநாடு சென்றால், கணவன் இன்னொருத்தியுடன் ஓடி விடுகிறான்.

கணவன் வெளிநாடு சென்றால் அவள் இன்னொருவருடன் ஓடிவிடுகிறாள்.

பரிசாரியார் சிறிது ஓய்வாகவிருந்தார்.

உங்களைப் பற்றி சிறிது கூறுங்கள் பரிசாரியார்? என்றேன்.

நான் சிறு பிள்ளையாக இருந்தபோது, எங்கள் வீட்டின் மூலைகளில்

நவதானியங்கள் குவிந்து கிடக்கும்.

எனது தந்தையார் ஒரு கோழியின் கால் ஒன்றினை அடித்து முறித்து விட்டு, தன்னிடமிருந்த உருக்கு மருந்தினை கோழியின் காலைச் சுற்றிக் கட்டி விட்டார். ஒரு வாரத்தில் கோழி பழைய நிலையினையடைந்து, வழமைபோல் நடக்கத் தொடங்கி விட்டது.

முறிவு வைத்தியம் பற்றிய ஆய்வு கோழியின் காலில் தான் தொடங்கியது. அவர் காடுகளுக்குச் செல்லும்போது, நானும் கூடச் செல்வேன். அப்பொழுது ஆயுதக் குழுக்கள் நடமாடிய **"தொப்பிகல"** காட்டுப் பிரதேசம்தான் அந்தப் பயங்கரக்காடு. செடிகளின் இலைகள் சிலவற்றை அங்கும் - இங்குமாகத் தேடி, உருவியெடுத்து, தோளில் கிடக்கும் பையினுள் போடுவார். சில மரத்தின் வேர்களைத் தோண்டித் துண்டித்து எடுப்பார். மரத்தின் வடக்குப் பக்கமாகச் செல்லும் வேர்களை மாத்திரமே வெட்டி எடுப்பார். அவற்றையெல்லாம் நானும் கற்று விட்டேன்.

மூலிகை மருத்துவம் பற்றி முதன்முதலில் கண்டுபிடித்தவர்கள் யார்? — எனது கேள்வி. அவர் கூறிய வார்த்தைகள் எனக்குப் புதுமையாகவிருந்தது. நாகரீக காலத்திற்கு முன்னர், ஆதிக்குடிகளான வேடர்கள்தான் காடுகளில் வாழ்ந்தவர்கள். தங்களுக்கு ஏற்பட்ட பசி, பிணிகளைக் காட்டில் உள்ள பழங்கள், இலைதழைகள், வேர்களால்தான் போக்கினார்கள்.

**"ஆதி வேடர்களால் கண்டுபிடிக்கப்பட்ட வைத்தியமுறை தான் ஆதிவேட வைத்தியமாகியது. காலவரையறையில் ஆயுள்வேத வைத்தியமாகி விட்டது"** என்றார்.

நமது நாட்டில் உள்ள ஆயுள்வேத வைத்தியசாலைகள் எல்லாம் ஆதிவேட வைத்தியசாலைகள் தான் என்ற உண்மை எனக்குப் புரிந்து விட்டது.

**"ரசாக்"** இப்போது ஓரளவு குணமாகி வருகிறான். அவனது பெயர் இதுதான். எனினும் முன்போல் அவனால் நடக்க முடியாது போல் உள்ளது.

பரிசாரியார் படுக்கையில் கிடந்தவர்களை உசார்படுத்திவிட்டு, மைபோல் அரைத்தெடுத்த மருந்தொன்றை அந்தந்த அவயங்களில் சலிக்கப் பூசிவிட்டு, இரும்புத் தண்டவாளத் துண்டுகளை அதன்மேல் ஏற்றிபிடித்துக் கொள்ளச் சொல்கிறார்.

அவர்களது கண்ணீர், பனித்துளிகள் விழுவதுபோல் முகத்தில் விழுகின்றன. சிலர் வாய்விட்டுக் கத்துகிறார்கள்.

இதனைவிட, நரகவேதனை நல்லதுபோல் அவர்களுக்குத் தெரிகிறது.

சிலர் - உயிர் மேலுலகு போய் விட்டுஇ வந்து விட்டது என்று கூறினர்.

காலம் வேகமாக நகர்கிறது. இருமாதங்கள் கழிந்து, வைத்தியர் வீட்டுப் பக்கமாக நான் சென்று கொண்டிருந்தேன். மூலிகைகளின் வாசனை மீண்டும் என் மூக்கைத் துளைக்கின்றன.

**"ரசாக்கின்"** தாயும், தந்தையும் மூன்று சக்கரத் தள்ளுவண்டி ஒன்றில் அவனைத் தூக்கி ஏற்றுகிறார்கள்.

பக்கத்தில் அவ்வூர் பிரதேச செயலக வாகனம் ஒன்றும் நிற்கிறது. **"டீ.எஸ். ஐயா"** தான் இந்த வண்டியை அந்தப் பெடியனுக்கு அன்பளிப்பாக வழங்கியதாக அங்கு நின்ற ஒருவர் பேசியது என்காதில் விழுகிறது.

எனது கணகளிலிருந்தும் இருசொட்டுக் கண்ணீர்கள்..........

என்னுள் இன்னுமொரு கேள்வி எழுந்தது. யாரிடமும் அதனைக் கேட்க முடியவில்லை.

எமது பிரதேசங்களான கதிரவெளி, பால்சேனை, பனிச்சங்கேணி, கல்குடா, கானாந்தனை, முறுத்தானை போன்ற பகுதிகளில் வாழ்ந்த ஆதிவேடக் குடிகள் சிலர் **"குரக்கன்"** நிறத்தில் உள்ள துண்டுகளை கழுத்தில் அணிந்திருந்தனர். எமது தலைவர்கள் சிலரும், இது போன்ற துண்டுகளை அணிகிறார்களே...... ஏன்? பரிசாரியாரிடம் வினவியபோது, வாயில் விரலை வைத்து என்னை எச்சரித்தார்.

**(யாவும் கற்பனை)**

## கூப்பன் இல-01


முழுப்பெயர் :- ..........................................................

முகவரி :- ..........................................................

..........................................................

இவ்விதம் வெளிவரும் கூப்பன்களை சேகரித்து வையுங்கள்.

25ஆவது இதழ் வெளிவருகையில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூவருக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.



குடும்ப மருத்துவத் தொடர் 04

# மனித வாழ்வு கருவறை முதல்.........

- Dr.K.அருளானந்தம் (MBBS, D,F,M) விரிவுரையாளர்
சௌக்கியபராமரிப்பு கற்கைகள் பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம். -

## தாய்ப்பால்

1. தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் தாயும், சேயும், சமூகமும் பல நன்மைகளை அடைகின்றன. சமூகம்:- நோயை எதிர்க்கக் கூடிய - அதிக மூளை விருத்தி கொண்ட - ஆரோக்கியமான மனிதனைப் பெறுகிறது.
2. குழந்தைக்குத் தொடர்ச்சியாக முதல் ஆறு மாதங்களுக்கு கட்டாயமாகத் தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் உடலில் அதிகளவு நோய் எதிர்ப்பு சக்தி கூடுவதுடன், தொற்றக் கூடிய நோய்களும், பிற்காலத்தில் தொற்றா நோய்களும் வராமல் தடுக்க உதவுகிறது.
3. சமூகத்தில் வெற்றிகரமாகத் தாய்ப்பாலை ஊட்டுவதில் தற்காலத்தில் சில தடைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது. உதாரணமாக:- அதீத வர்த்தக விளம்பரங்கள், குறைந்தளவிலான குடும்ப ஆதரவு, சுகாதாரப் பராமரிப்பாளர்களின் ஆதரவு குறைவு. (பிரசவத்துக்கு முன்னரும்-பின்னரும்) அதேவேளை இயல்பாகவே தாய்ப்பால் இல்லை/ குறைவு என்கின்ற எண்ணமுமே ஆகும்.

தாய்ப்பாலைப் பிரதான உணவாகக் கொண்டு வளர்ந்து வரும் குழந்தை தன் வளர்ச்சிப் படிகளையும் படிப்படியாக மேற்கொண்டு வருகிறது. குழந்தையின் உடற்றொழிற்பாடுகள் படிப்படியாக மாற்றமடையத் தொடங்குகிறது. உணவின் தேவை, உணவின் அளவு, உணவின் மூலம் ஏற்படும் சக்தியின் அளவு போன்றன கூடிக்கொண்டு செல்வதனால் உணவின் தன்மையில் ஏற்படும் மாற்றம் தவிர்க்க முடியாததாகிறது.

தாய்ப்பாலை மட்டுமே உட்கொண்டு வந்த குழந்தை உப உணவுகளுக்கு மாற்றப்படுகிறது. அதாவது தாய்ப்பாலுடன் சேர்த்து மிகவும் பொருத்தமான உப உணவுகள் ஊட்டப்படுகிறது.

தாய்ப்பாலுடன் சேர்த்துக் கொடுக்கப்படுகின்ற உப உணவானது

பாதுகாப்பானதாகவும், சரியான அளவுள்ளதாகவும், குழந்தை வளர்ச்சிக்கு காலத்தின் தேவைக்கு ஒப்பானதாகவும். ஏற்றுக் கொள்ளக் கூடிய மிகப்பொருத்தமான முறையில் கொடுக்கப்படுகிறது.

கொடுக்கப்படும் அளவும்-வீதமும் வயதுக்கேற்ப வேறுபடும். 6மாதத்திலிருந்து 2,3 தடவைகளிலிருந்து 3,4தடவைகளாக ஒரு நாளைக்கு அதிகரிக்கப்படுகிறது. இதன்போது குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான கலோரியின் அளவும் (சக்தியின் அளவு) வேறுபடுகிறது.

உதாரணமாக:- 6-8மாதங்களுக்கு 600kg கலரியும், 9-11மாதங்களுக்கு 700kg கலரியும், 12-24மாதங்களுக்கு 900kg கலரியும் பொதுவாகக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

இந்நிலையில் குழந்தை தனது வளர்ச்சிப் படிகளைப் படிப்படியாக ஆரம்பிக்கிறது. முன்பு குறிப்பிட்டது போல் கிடையாக இருந்த குழந்தை 3மாதங்களில் தன் நிலையை மாற்றி - திசையை மாற்றுகிறது. பின்னர் 6மோதம் அளவில் பிறர் உதவியுடன் இருக்கத் தொடங்குகிறது. அதனைத் தொடர்ந்து பிறர் உதவியின்றி இருக்கப் பழகுகிறது. இதன்போது தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அசைவுகளை மேற்கொள்ள முனைகிறது.

இதன் வெளிப்பாடாக தனது ஒலியை எழுப்பி பிறரது கவனத்தை ஈர்க்கத் தொடங்குகிறது. நிறமுள்ள பதார்த்தங்களையும், கண்ணால் கவரும் பொருட்கள், அசையும் பொருட்களையும் தான் ஈர்க்கத் தொடங்குகிறது.

இதனிடையே குழந்தைக்கான மிக முக்கிய தடுப்பூசிகள் (2,4,6ஆம் மாத முடிவில்) ஏற்றப்பட்டுவிடும். குழந்தை படிப்படியாக பிறர் உதவியை நாடிப் பின்னர்(8ஆம் மாதத் தொடக்கத்திலிருந்து) நடக்கத் தொடங்குகிறது. இதன்போது கவரக்கூடிய சத்தங்களை உருவாக்குகிறது.

இந்நிலையில் குழந்தைகள் எல்லோரையும் ஒரே மாதிரியாக இனங்காண (பெற்றோரைத் தவிர) முனைகிறது. உதாரணமாக:-குழந்தை எல்லோரிடமும் பயமின்றி உறவை நாடும். 9ஆவது மாதம் அளவில் குழந்தை மற்றவர்களை வேறுபடுத்தி அறியத் தொடங்கும். ஒருசில அன்பான சொற்களை உச்சரிக்கத் தொடங்கும். இதன்போது சின்னம்மைக்கான தடுப்பூசியும் ஏற்றப்பட்டு விடும்.

(தொடரும்)

# “ தென்றல் ” குறுக்கெழுத்துப் போட்டி இல - 10

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 12 | 13 | 14 | ■ | 2 | 15 | 16 |
| 3 | | | | ■ | ■ | 4 | |
| ■ | 5 | | | 17 | 18 | ■ | ■ |
| ■ | 6 | | | | | ■ | 20 |
| 21 | ■ | | ■ | 7 | | | |
| 8 | | ■ | 22 | ■ | 9 | | |
| | ■ | 10 | | | | 19 | ■ |
| | ■ | | | | ■ | 11 | |

## இடமிருந்து வலம்

01. இது வந்தால் வாக்காளருக்கு மதிப்புத்தான்.
02. பசளை இட்ட பயிர் இப்படிக் காட்சியளிக்கும்.
03. மட்பாத்திரங்களின் தயாரிப்பாளன். (திரும்பியுள்ளது)
04. போர்ப் பரணி பாடுவதற்குரிய வீரன் வெல்ல வேண்டிய உயிரினம் ஒன்று. (திரும்பியுள்ளது)
05. தாமரை. (குழம்பியுள்ளது)
06 விலை குறைந்த ஓர் உலோகம்.
07 தொழில் வழங்குநர் விண்ணப்பதாரிகளிடம் கேட்பது.
08. பெண்களுக்கோர் வேலி.
09. திரிகடுகப் பொருள்களுள் ஒன்று. (குழம்பியுள்ளது)
10. திருமணம் நிச்சயமானால் இது வைக்கப்படும். (குழம்பியுள்ளது)
11. முருகனுக்கு முன்னால் வரும். (திரும்பியுள்ளது)

## மேலிருந்து கீழ்

01. ஆதிகாலவாசிகள் இறைச்சியைப் பாதுகாக்கப் பயன்படுத்திய இயற்கைப் பொருள்.
12. கற்பிளலோடு ஒத்துள்ள மனமுள்ள இவர் தலைகீழாகத் தொங்குகிறார்.
13. தேர்தல் காலத்தில் இது கட்டிய பலருக்கு இன்று சங்கடம். (குழம்பியுள்ளது)
14. இரவுக்கு மறுபெயர். (தலைகீழ்)
15. கோவிலும் இதுவும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை.
16. தசாவதாரத்தில் கிருஷ்ணரின் இரண்டாவது வடிவம். (தலைகீழ்)
17. இந்த மோகம் பிடித்த பலர் வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டு, சோரம் போனதுண்டு.
18. பிரமுகர்களுக்குக் கௌரவமாக வழங்கப்படும் வரவேற்பில் முக்கிய இடம்பெறும்.
19. பரணி என்ற நதியின் முன்னாள் உள்ள அடைமொழி. (குழம்பியுள்ளது)
20. மஞ்சள் அரைக்கும் பெண்கள் அம்மியடியிலும் இது கொட்டுவர். (தலைகீழ்)
21. சித்தாந்தியின் கோட்பாட்டுக்கு மாறுபட்டவன்.
22. இலங்கை ஜனாதிபதியின் வாசஸ்தல மாளிகை.

* விடைகளை இங்கு வெளியாகியுள்ள கூப்பனில் எழுதிக் கத்தரித்து, தபால் அட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும்.
* தபால் உறைக்குள் வைத்து அனுப்பப்படும் கூப்பன் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
* முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக 300/- 200/-, 100/- வழங்கப்படும்.
* போட்டி முடிவுத்திகதி 15.11.2012
* விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :-

**"தென்றல்"**
**குறுக்கெழுத்துப் போட்டி இல.09**
**44/1, பழைய கல்முனை வீதி, கல்லடி,**
**மட்டக்களப்பு.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 09 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பூ | 2 மி | | 3 வை | 4 ர | 5 மு | 6 த் | 7 து |
| 8 த | ன் | 9 மை | | 10 உ | த் | த | மி |
| 11 ம் | ன | இ | | 12 ம் | தி | பு | |
| | ல் | | 13 க | | 14 ரை | க | 15 த |
| 16 க | | 17 சி | லை | | | 18 ம் | இ |
| 19 லா | 20 ப | | 21 வா | 22 வ | ன் | | ழ் |
| 23 நி | றை | 24 யு | ண | வு | | 25 தை | |
| தி | | 26 வா | ன | ர | ம் | | 27 கை |

## "தென்றல்" குறுக்கெழுத்துப் போட்டி இல. - 09 இல் வெற்றி பெற்றோர்

### முதலாம் இடம்
திருமதி லலிதா தங்கராஜா
289, பிரதான வீதி,
செல்வாநகர்,
ஆரையம்பதி.

### இரண்டாம் இடம்
ச.சர்வசன்
வாகரையார் வீதி,
வீதிகளுதாவளை.

### மூன்றாம் இடம்
திருமதி கீ. தியாகரன்
ப. நோ. கூ. சங்கம்
வவுணதீவு.

### பாராட்டுப் பெறுவோர்
- திருமதி லோ. மேகராசா
  கிரான்குளம்.
- இ. வேஜினா
  வவுனியா.
- ந. இந்துமதி
  அக்கரைப்பற்று.
- ரி. இளங்கோ
  திருகோணமலை.
- த. செந்தூரான்
  மகிழூர்.



வாடிக்கையார்களுக்கு இனிய கிறிஸ்மஸ்
நல்வாழ்த்துக்கள்!!!
ஆரையம்பதியில்......
அழகிய ௨௨ கரட்.
தங்க நகைகளை
உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம் செய்ய
வேண்டிய ஒரே இடம்
தங்க நகைகளின்
சொர்க்காபுரி
அபிராமி ஜீவல்ஸ்
பிரதான வீதி
ஆரையம்பதி - 02
தொ.பே : 065 - 3644944
077 - 6506329
AD/0008



வாடிக்கையார்களுக்கு இனிய கிறிஸ்மஸ்
நல்வாழ்த்துக்கள்!!!
அம்மன் துணை
லக்ஷனா
கொம்பியூட்டர் சீல்
Pre - Ink (Five Colour)
Polymer Stamp
ஒரு மணித்தியாலத்தில்
தரமாக செய்து தரப்படும்.
வெயிலி வீதி. அரசடி, மட்டக்களப்பு.
தொ.பே : 065 36 470 57, 077 69 155 74.
E-mail -ladshana@gmail.com
AD/0024


வாடிக்கையார்களுக்கு இனிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்!!!
மட்டு நகரில்......
அழகிய 22 கரட் தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள நாட வேண்டிய
தங்க நகைகளின் சொர்க்காபுரி
சுபாஜினி
ஜூவலரி
51, பிரதான வீதி
மட்டக்களப்பு.
தொ.பே: 065-2224863
AD/0005

# விலங்குகளின் விநோதம்


- சி.டானியல் -



# தென்றலின் ஊர்வலம்

-கவிகரன்-





## ஒரே சூலில் 5 குழந்தைகள் பிரசவம்!!!

### - கண்டியில் சம்பவம் -

கண்டி-போதனா வைத்தியசாலையில் கர்ப்பிணித் தாயொருவர் ஒரே தடவையில் 5 குழந்தைகளை அண்மையில் (15.10.2012) பிரசவித்துள்ளார். மூன்று ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைக ளுமே இவ்வாறு பிறந்துள்ளன- என்று மேற்படி வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஜி.ஏ. திஸாநாயக்க **"தென்றலுக்குத்"** தெரிவித்தார்.

அறுவைச் சிகிச்சை மூலம் பிரசவிக்கப்பட்ட குழந்தைகளில் ஒன்று 1கிலோவும், இரண்டு குழந் தைகள் தலா 950 கிராமும், மற்றுமொரு குழந்தை 850 கிராமும் நிறை காணப்பட்ட அதேவேளை மற்மொரு குழந்தை 500 கிராமாக இருந்ததாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

கேகாலை மாவட்டம் றெட்டிமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி தாயான திலினி ரசாங்கிகா ( வயது- 29) என்ற பெண்ணுக்கு இது தலைப்பிரசவமாகும். இவரது கணவர் கேகாலை பிரதேச சபை உறுப்பினராவார்.

# புலமைப்பரிசில் பரீட்சை (2012)ல் சித்திபெற்றோர் விபரம்

மட்/கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம்




சோமசுந்தரம்
சுதர்ஜியா
புள்ளிகள் - 171

மட்/ஆரையம்பதி நவரெத்தினராசா வித்தியாலயம்



பிரதீபன்
ருசாந்
புள்ளிகள் - 163



துஷ்யந்தன்
பிரதிக்ஷா
புள்ளிகள் - 157


மட்/பெரிய போரதீவு பாரதி வித்தியாலயம்



கேதாரபிள்ளை
சத்தியா
புள்ளிகள் -155

---

மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயம்



கயிலாயப்பிள்ளை
யுவாரகன்
புள்ளிகள் - 159



மோகனசுந்தரம்
கேனிஷா
புள்ளிகள் - 158



ஜீவராசா
பவலக்ஷன்
புள்ளிகள் - 150



வினாயகன்
பிரதாபன்
புள்ளிகள் - 149


---

மட்/ஐயன்கேணி தமிழ் வித்தியாலயம்




குலசேகரம்
எப்சியா
புள்ளிகள் - 153

மட்/களுதாவளை மகா வித்தியாலயம்



ஜெயரெத்தினம்
ரிஷானன்
புள்ளிகள் - 174



ஜெயராசா
அனந்தியா
புள்ளிகள் - 154



புவிநாயகம்
மதுரதன்
புள்ளிகள் - 151

# இவர்களைத் "தென்றல்" வாழ்த்துகிறது!!

மட்/மாவிலங்கத் துறை விக்னேஸ்வரா வித்தியாலயம்



சுந்தரலிங்கம்
சிந்துஜா
புள்ளிகள் – 155

மட்/கல்லடி விநாயகர் வித்தியாலயம்



உதயகுமார்
அஜந்தன்
புள்ளிகள் – 156



ஜெயராஜ்
கௌதாரன்
புள்ளிகள் – 150

மட்/தாழங்குடா விநாயகர் வித்தியாலயம்



பிள்ளையாப்போடி
பதுஷாலினி
புள்ளிகள் –147

---


மட்/ஆரைப்பற்றை நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம்



ஜெகநாதன்
ஸப்தனா
புள்ளிகள் – 166



றெட்ணராச்
அபிசேக்
புள்ளிகள் – 163



ரவிராகவன்
கோசிகன்
புள்ளிகள் – 155

மட்/மாமாங்கேஸ்வரர் வித்தியாலயம்



கமலதாசன்
நிதுர்ஷன்
புள்ளிகள் – 155

---

மட்/அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலயம்



சுதாகரன்
அபிலக்ஷன்
புள்ளிகள் – 152



புவனேசராஜா
நிதுர்ஜிதன்
புள்ளிகள் – 151

மட்/வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை



நித்தியானந்தம்
யதுசயா
புள்ளிகள் – 178

மட்/ பட்டிருப்பு தேசிய பாடசாலை




கந்தசாமி
சுலக்சனா
புள்ளிகள் – 162

## இவர்களைத் "தென்றல்" வாழ்த்துகிறது!!


### மட்/வந்தாறுமூலை விஸ்ணு மகாவித்தியாலயம்



திருச்செல்வம்
கதுஷன்
புள்ளிகள் – 174



சசிதரன்
கர்ஷிகா
புள்ளிகள் – 170




யோகராஜா
நதுர்ஜன்
புள்ளிகள் – 170



குணரெத்தினம்
வுவிஷாந்
புள்ளிகள் –167


### மட்/வந்தாறுமூலை விஸ்ணு மகாவித்தியாலயம்



உருத்திரகுமார்
மேதுஜன்
புள்ளிகள் – 164



பாலசிங்கம்
பாவேந்தநாத்
புள்ளிகள் – 160



குணரெட்ணம்
நிதர்சன்
புள்ளிகள் – 160



புவனேசச்சந்திரன்
துவாரகா
புள்ளிகள் – 160

### மட்/வந்தாறுமூலை விஸ்ணு மகாவித்தியாலயம்



தயாளகுமார்
ஜனா
புள்ளிகள் – 159



பகீரதன்
டிலக்சன்
புள்ளிகள் – 152



தவசீலன்
டனுஸ்கா
புள்ளிகள் – 152



சிவானந்தராஜா
தருநிசாந்
புள்ளிகள் – 148

## இவர்களைத் "தென்றல்" வாழ்த்துகிறது!!

### மட்/களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயம்



வினாயகலிங்கம்
பிரவீன்
புள்ளிகள் - 169



தில்லையம்பலம்
யனுஸ்கன்
புள்ளிகள் - 165



இராசரெத்தினம்
பருதிகாஸ்
புள்ளிகள் - 161



வாமதேவன்
அபிவர்த்தனி
புள்ளிகள் -157

### மட்/களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயம்



மகேந்திரன்
நிரஞ்சனி
புள்ளிகள் - 151



தயானந்தன்
திருஸ்ரிகா
புள்ளிகள் - 148



மகேசன்
பிருதுவி
புள்ளிகள் - 148



சிதம்பரநாதன்
பிரணவன்
புள்ளிகள் - 147

### மட்/களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயம்



சுந்தரலிங்கம்
லிபர்சனா
புள்ளிகள் - 147

### மட்/செட்டிபாளையம் மகா வித்தியாலயம்



விஜயநாயகம்
சாருஹா
புள்ளிகள் - 156




மோகனதாஸ்
ரிஜானா
புள்ளிகள் - 155



பிரபாகரன்
திஷாயினி
புள்ளிகள் - 151

## இவர்களைத் "தென்றல்" வாழ்த்துகிறது!!

**மட்/செட்டிபாளையம் மகா வித்தியாலயம்**




யோகராசா
பவித்ரயன்
புள்ளிகள் –149




வரதராஜா
தர்ஷனா
புள்ளிகள் – 148

**மட்/கல்லடி - வேலூர் ஸ்ரீ சக்தி வித்தியாலயம்**



இராமச்சந்திரன்
தனுஜன்
புள்ளிகள் – 162



நடராசா
கிஷாளன்
புள்ளிகள் –150

---

**மட்/நாவற்காடு நாமகள் வித்தியாலயம்**




பிரசாந்தன்
பிரசுராஜ்
புள்ளிகள் – 169




கனகரெத்தினம்
அஸ்வினி
புள்ளிகள் – 150

**மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம்**



மணிவண்ணன்
யஷோபிகா
புள்ளிகள் – 154



வினாயகன்
பிரதாபன்
புள்ளிகள் – 149


---

**மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம்**



கதிர்காமத்தம்பி
விண்மதி
புள்ளிகள் – 162

**மட்/கல்லடி முகத்துவாரம் விபுலானந்த வித்தியாலயம்**



விக்னேஸ்வரன்
சதுஷன்
புள்ளிகள் – 178



சிவராசா
லக்சனா
புள்ளிகள் – 162



ஜேசுதாசன்
யூட் ஜெருசாந்
புள்ளிகள் – 155

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்!!!





ஆண், பெண் இருபாலாருக்கும் சகல விதமான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும். வீதி ஒழுங்கு மற்றும் இயந்திரவியல் பற்றிய பாடங்கள் தரமான ஆசிரியர்கள் மூலம் ஒழுங்கு முறையில் இலவசமாக கற்றுக்கொடுக்கப்படும்.

VEHICLE HIRE

திருமணவைபவங்களுக்கு
கார் மற்றும்
சொகுசு பஸ்
வழங்கப்படும்.





இவற்றோடு மஞ்சந்தொடுவாயில் யப்பானில் இருந்து தருவிக்கப்பட்ட வாகனங்களின் சந்தை நடைபெறுகிறது.

தொடர்புகளுக்கு.........

**IYNGARAN LEARNERS**

NO. 61, STATION CROSS ROAD
BATTICALOA
TEL: 065-4907370 / 077-3138372

AD/0026

வாடிக்கையாளர்களுக்கு இனிய கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்!!!



1961 - 2011
50
மக்கள் வங்கி

மக்கள் வங்கியின்
எதெர இசுர NRFC கணக்கு
வைப்பாளர்களுக்கு
மாத்திரம் வழங்கப்படும்
விசேட
வரப்பிரசாதங்கள்

எதெர இசுர NRFC கணக்கின் மூலம் நீங்கள் பெறும் அனுகூலம்:

- அரச வங்கியின் முழுமையான பாதுகாப்பு
- கணக்கினை வெளிநாட்டு நாணயத்திலே கொண்டு செல்லல் - 13 வெளிநாட்டு நாணய வகைகள்
- அனுமதிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்காக பணத்தினை சுதந்திரமாக வெளிநாடுகளுக்கு பரிமாற்றம் செய்யலாம்
- பாரிய வைப்புகளுக்கு விசேட வட்டி வீதம்
- வரி விலக்களிக்கப்பட்ட வட்டி
- நீங்கள் அனுப்பும் பணத்தினை வைப்பு செய்ய எவ்வித கட்டணமும் அறவிடப்படாது
- இலகு தவணைமுறையில் பீபல்ஸ் ட்ரவல்ஸ் ஊடாக விமான பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்யலாம்
- பீபல்ஸ் லீசிங் ஊடாக சலுகை அடிப்படையில் லீசிங் வசதிகள்
- சர்வதேச வீஸா கடன் அட்டை வசதி
- வீடமைப்பு மற்றும் சுயதொழில் கடன் வசதி
- கணக்கு மீதிக்கு எதிராக உடனடிக் கடன்
- நாடெங்கிலும் பரவியுள்ள எமது 685 இற்கும் அதிகமான கிளைகளின் ஊடாக நீங்கள் குறிப்பிடுபவருக்கு பணத்தினை உடனடியாக வழங்கும் வசதி
- கணக்கு மீதியின் அடிப்படையில் 50வது ஆண்டு நிறைவு எதெர இசுர NRFC வாசனா - 2011 சீட்டிழுப்பின் கீழ் பரிசு பெறும் வாய்ப்பு - டிசெம்பர் மாதம் வரை
- ஒரு மில்லியன் ரூபாய் வரை திடீர் விபத்துக்கான காப்புறுதி
- பயணப்பொதி காப்பீடு

எத்தெர இசுர

மக்கள் வங்கி
வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல் சேவை
59, டீ,ஆர் விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை.

AD/0002

தொலைபேசி: +94 - 11 - 2334278
+94 - 11 - 2332746
+94 - 11 - 2446409
+94 - 11 - 5338459
+94 - 11 - 2332745

தொலைநகல்: +94 - 11 - 5338459
+94 - 11 - 2332753
மின்னஞ்சல்: teletran@peoplesbank.lk
nrfc@peoplesbank.lk
இணையதளம்: www.peoplesbank.lk

AAA- Brand Finance Rating, AA (lka) Fitch Rating

நிபந்தனைகளுக்குட்பட்டது

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி



வணசிங்கா பிரிண்டர்ஸ் 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.